# லேவியராகமம்

இஸ்ரவேலர்கள் சினாய் மலையருகில் சம வெளியில் கூடாரம் அமைத்திருந்தார்கள்.கர்த்தர் தன்னுடைய வல்ல மையின் செயற்பாட்டினால் இவர்களை அடிமைத்தன த்திலிருந்து சில மாதங்களுக்கு முன்பாக விடுவித்தார்.. தரிசாகக் கிடந்த சீனாய்த் தீபகற்பத்தில் இவர்களை சிறப்பாக வழிநடத்தி வந்தார், அங்கே அவர்களுக்கு நியாயப்பிரமணங்களைக் கட்டளையிட்டு அதன்படி கீழ்படிந்து நடக்க வைத்தார்.கர்த்தர் மோசேய்க்கு சுமந்து செல்லக்கூடிய ஆரதனை நிலையம் (tabernacle) ஒன்றிற்கான சரியான திட்டத்தையும் வழங்கியிருந்தார்.அவைகள் சரியாகப் பின்பற்றப்பட்டன,இப்பொது மிகவும் அழகான ஆராதனைக் கூடாரம் இஸ்ரவேலர்களின் கூடாரங்களுக்கு மத்தியில் நிலை கொ ண்டிருந்தது., அங்கு ஆரோனும் அவரது பிள்ளைகளும் ஆசாரியர்களாக அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். லேவியர் ஆகாமப்புத்தகம் உண்மையில் ஆசாரியர்களுக்கான ஒரு கை ஏடாகும், புதிய ஆசாரியர்களை எப்படி வழிநடத்துவது என்றும், ஆசாரியர்களது வேலைகளை விபரிப்பதும், ஜனங்கள் எப்படி கர்த்தரை ஆராதிப்பது என்றும் விளக்குகின்றது. பொதுவாக முதல் அரைவாசிப் புத்தகமும், பலியிடுவதையும், ஆசாரியர்களது கடமைகளையும் விளக்குகின்றது.மிகுதி அரைவாசிப் புத்தகம் தனிப்பட்ட கொள்கைகளை விளக்குகின்றது, அதே போல் பரிசுத்தமாக இருப்பது பற்றியும் விளக்குகின்றது. ஆசாரியர்களுடைய எல்லாவிதமான விளக்கங்களிலும், கர்த்தருடன் எப்படி வல்லமையான உறவு வைத்துக் கொள்வது என்பது பற்றியும் கூறுகின்றது.

### கால அட்டவனை

| | |
|---|---|
| யோசேப்பின் மரணம் | கி.மு.1805 |
| யாத்திரை, நியாயப்பிரமாணம் கொடுக்கப்படல், லேவியராகம நிகழ்வுகள். | கி.மு.1446 |
| இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நுழைதல். | கி.மு.1406 |
| முதலாம் நியாயாதிபதி ஒத்தானியேல் | கி.மு.1337 |
| முதலாவது அரசன் சவுல் | கி.மு.1051 |

### பின்னணி

கி.மு 1446இல்லேவியராகம நிகழ்வுகள் ஒரு மாதகாலத்திற்கு,சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட பிற்பாடு இடம்பெற்றன. (யாத். 20).

இஸ்ரவேலின் ஆரம்ப சரித்திரத்தில் ஆராதனை செய்வது குடும்ப விடயமாக இருந்தது, இதில் வீட்டின் தலைவன் ஆசாரியராகத் தன்னுடைய குடும்பத்தாருக்குச் செயற்படுவார், கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு நியாயப்பிரமாணமும், ஆசாரிப்புக் கூடாரமும் வழங்கிய பிற்பாடு, ஆரோனும் அவரது சந்ததியினரும் ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டார்கள். (யாத்28:1), அத்துடன் லேவி கோத்திரத்தின் மிகுதியானவர்கள் இவர்களுக்கு உதவியாக இருப்பார்கள். (எண் 18:1-2).லேவியராகமத்தில் பிரதானமாக ஆசாரியர்களினதும்,லேவியர்களினதும் கடமைகள் கூறப்பட்டுள்ளன.

**எழுதியவர்;-** மோசே

கர்த்தர் மோசேக்கு கூறினார் என்ற சொற்பதம் ஐம்பது தடவைகளுக்கு மேல் லேவியராக மத்தில் இடம்பெற்றுள்ளதை நாம் வாசிக்க முடிகின்றது. கர்த்தரிடமிருந்து வந்த இந்த வாரத்தைகளை மோசே பதிவு செய்யாமல் இருந்திருந்தால், அவர் அவைகளை ஒரு எழுத்தாளரிடம் கூறியிருக்க வேண்டும்.மேசேயே இதன் எழுத்தாளராகும்.

லேவியராகமம்;- இதில் உள்ள நியாயப்பிரமாணங்களை மோசேயே எழுதினார் என்று யோவான் 1; 45 கூறுகின்றது. இது பழைய ஏற்பாட்டின் ஐந்து ஆகமங்களையும் குறிப்பிடுகின்றது. புதிய ஏற்பாடு லேவியராகமப் புத்தகம் மோசேயினால் எழுதப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

## காலமும் இடமும்.

கி.மு. 1446இல் சம்பவங்கள் இடம்பெற்றவுடனே , அவைகள் யாவற்றையும் கர்த்தரிடமிருந்து பெற்று மோசே பதிவு செய்துள்ளார். லேவியராகமம் சீனாய் மலையில் வைத்து எழுதப்பட்டதற்கான தெளிவான ஆதாரங்கள் காணப்படுகின்றன. (25:1; 26:46; 27:34).

## நோக்கம்

• இஸ்ரவேலர்கள் எகிப்தின் சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்பதைக் காண் பிப்பதற்காகவும், எப்படி அவர்கள் கர்த்தருடைய ஜனங்களாக வாழ்ந்தார்கள் என்பதையும் காண்பிப்பதற்காகவுமாகும். , இது எல்லா விசுவாசிகளுக்கும் பொருத்தமானதாகும். : முதலில் இரட்சிப்பு எற்படுத்தப்பட்டு, பின்னு பரிசுத்தம் ஏற்படும்.

• பாவத்தைப்பற்றியதான அறிவுதான் கர்த்தருடன் ஒருவர் மேற்கொள்ளும் உறுவுகளுக்குத் தேவையான பரிசுத்தம் பற்றிய உணர்வை ஏற்படுத்துகின்றது. இது நியாயப்பிரமாணத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

• பலிசெலுத்தப்படும் கிறிஸ்த்து ஒரு பூரணபலியாகும் என்பதை பலிகள் நிச்சயமாக பழுதற்றவைகளாகவும் பூரணமாகவும் இருத்தல் வேண்டும் என்பதை வலியுறித்திக் கூறுகின்றது,

## முக்கிய சம்பவங்கள்.

• கர்த்தர் சொன்னார் என்ற சொற்பதம் 50 தடவைகளுக்குமேல் லேவியராகமத்தில் கூறப்படுகின்றது.இது வேதாகமத்தில் வேறு புத்தகங்களில் கூறப்பட்டவற்றிலும் அதிகமா னவையாகும்.

• வேறு எந்த வேதாகமப் புத்தகத்திலும் இந்தளவு பரிசுத்தம் பற்றி பேசவில்லை. பலவிதமான பரிசுத்தம் பற்றி 150 தடவைகளுக்கு மேல் பேசப்படுகின்றது. பலியிடுதல்பற்றி 42 தடவைகளும், ஆசாரியர் பற்றி 189 தடவைகளும் இரத்தம் பற்றி 86 தடவைகளும் கூறப்பட்டுள்ளது. .

## சுருக்கம்.

1. காணிக்கைகள் (1–7)
2. உறவைப் பாதுகாத்தல். (1–3)
3. தகன பலிகள் (1)
4. தானிய பலிகள் (2)
5. சமாதான பலிகள் (3)
6. உறவை மீள் நிலைப்படுத்தல்(4:1–6:7)
7. பாவநிவாரணபலி(4:1–5:13)
8. குற்றநிவாரணபலி (5:14–6:7)
9. பலியிடுதலுக்கான மேலும் சில ஒழுங்குகள். (6:8–7:38)
10. பிரதிஷ்டை (8–10)
11. ஆரோனையும் அவரது மகன் மாரையும் பிரதிஷ்டைசெய்தல்(8)
12. ஆரோனும் அவரது மகன்மாரும் ஆசாரிய ஊழியத்தை ஆரம்பித்தல் (9)
13. நாதாபு, அபியூ (10)
14. ஒழுங்கான வாழ்க்கைமுறை (11–15)
15. அசுத்த உணவுகள் (11)
16. குழந்தை பிறப்பினால் அசுத்தமடைதல். (12)
17. நோயினால் தீட்டுப்படல். (13–15)
18. பலிகள் (16–17)
19. பாவபரிகார நாள் (16)
20. பலிசெலுத்துவதற்கும் சாப்பிடுவதற்குமான நிபந்தனைகள். (17)

21. ஒழுங்கான வாழ்க்கைமுறை (18–20)
22. பாலியல் சம்பந்தமான நியாயப்பிரமாணம் (18)
23. நியாயப்பிரமாணமும் குற்றங்களும். (19–20)
24. பிரதிஸ்டை(21–22)
25. ஆசாரியர்களுக்கான நியமங்கள். (21:1–22:16)
26. பலி செலுத்துவதற்கான நியமங்கள். (22:17-33)
27. காணிக்கைகள் (23–25)
28. வாராந்த ஓய்வு நாள். (23:1-3)
29. பஷ்கா, புளிப்பில்லா அப்பப்பண்டிகைகள், (23:4-8)
30. முதற்பலன் பண்டிகை (23:9-14)
31. அறுவடைப் பண்டிகை (பெந்தகோஸ்தே என்று அழைக்கப்படும். ) (23:15-22)
32. எக்காளப் பண்டிகை (23:23-25)
33. பாவப்பரிகார நாள். (23:26-32)
34. கூடாரப்பண்டிகை (23:33-44)
35. அப்பமும் எண்ணெய்க்கான காணிக்கை (24:1-9)
36. தேவனை தூஷித்தல் (24:10-23)
37. ஏழாம் வருட ஓய்வு நாள். (25:1-7, 18-22)
38. ஐம்பதாம் வருட ஓய்வு நாள். (யூபிலி ) (25:8-17, 23-55)
39. கீழ்ப்படிதலும் கீழ்ப்படியாமையும். (26)
40. காணிக்கைகளையும் தசம பாகத்தையும் மீட்டுக் கொள்ளல். (27)

## லேவியர் ஆகாமம்.

இஸ்ரவேலர்கள் சீனாய் மலையருகில் சமவெளியில் கூடாரம் அமைத்திருந்தார்கள்.கர்த்தர் தன்னுடைய வல்லமையின் செயற்பாட்டினால் இவர்களை அடிமைத்தனத்திலிருந்து சில மாதங்களுக்கு முன்பாக விடுவித்தார்.. தரிசாகக் கிடந்த சீனாய்த் தீபகற்பத்தில் இவர்களை சிறப்பாக வழிநடத்திவந்தார்,அங்கே அவர்களுக்கு நியாயப்பிரமாணங்களைக் கட்டளையிட்டு அதன்படி கீழ்படிந்து நடக்கவைத்தார். கர்த்தர் மோசேய்க்கு சுமந்து செல்லக்கூடிய ஆரதனை நிலையம் (tabernacle) ஒன்றிற்கான சரியான திட்டத்தையும் வழங்கியிருந்தார். அவைகள் சரியாகப் பின்பற்றப்பட்டன,இப்போது மிகவும் அழகான ஆராதனைக் கூடாரம் இஸ்ரவேலர்களின் கூடாரங்களுக்கு மத்தியில் நிலை

கொண்டிருந்தது., அங்கு ஆரோனும் அவரது பிள்ளைகளும் ஆசாரியர்களாக அபிஷேகம் பண்ணப்பட்டார்கள். லேவியர் ஆகாமப் புத்தகம் உண்மையில் ஆசாரியர்களுக்கான ஒரு கை ஏடாகும், புதிய ஆசாரியர்களை எப்படி வழி நடத்துவது என்றும், ஆசாரியர்களது வேலைகளை விபரிப்பதும், ஜனங்கள் எப்படி கர்த்தரை ஆராதிப்பது என்றும் விளக்குகின்றது. பொதுவாக முதல் அரைவாசிப் புத்தகமும், பலியிடுவதையும், ஆசாரியர்களது கடமைகளையும் விளக்குகின்றது. , மிகுதி அரைவாசிப் புத்தகம் தனிப்பட்ட கொள்கைகளை விளக்குகின்றது,அதேபோல் பரிசுத்தமாக இருப்பதுபற்றியும் விளக்குகின்றது. ஆசாரியர்களுடைய எல்லாவிதமான விளக்கங்களிலும், கர்த்தருடன் எப்படி வல்லமையான உறவுவைத்துக் கொள்வது என்பது பற்றியும் கூறுகின்றது.

ஆசாரிப்புக் கூடாரத்தில் கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளோடு குடியிருந்து, தன்னுடைய வல்லமையையும், பிரசன்னத்தையும் காண்பிக்கின்றார்


கர்த்தருடைய பிரசன்னம் அச்சம் தருவதாக இருப்பதை நாம் உணருகிறோம். : கர்த்தர் யாருடன் வாசம் செய்கிறாரோ அவர்கள் பரிசுத்தமும், வித்தியாசமான ஜனங்களுமாகும்.

ஒவ்வொரு சமயம் சார்ந்ததும், நன்நெறி சார்ந்ததுமான ஒழுக்க நெறிகள், வீட்டிலே இந்த உண்மைகளைச் செயற்படுத்துகின்றன. கர்த்தர் எங்களுடன் இருந்தால் நாம் முற்று முழுதாக கர்த்தருக்கென்று வேறு பிரிந்தவர்களாக இருத்தல் வேண்டும். பலிபீடத்திற்கு முன்பாகப் பலி செலுத்துவதற்கு நிற்கும் போது நாம் பாவிகள் என்று உணர்கின்றோம். பலி செலுத்தப்படும் இரத்தத்தினால் மாத்திரமே ஒரு மனிதன் சுத்திகரிக்கப்பட்டு, கர்த்தருக்கு அண்மையில் கொணடுவரப்பட்டு கர்த்தரை ஆராதனை செய்கிறார், மற்றும் அவரது பிரசன்னத்தைக் கொண்டாடுகிறான். பொதுவாக லேவியர் ஆகமத்தில் கூறப்பட்டுள்ள மதசார்பான விடயங்கள் உங்களுக்கும் எனக்கும் அந்நிய விடயமாகவே காணப்படுகின்றன.

இஸ்ரவேலர்கள் சீனாய் மலை அடிவாரத்தில் கூடாரங்களை அமைத்திருந்தார்கள், அங்கே செயற்பாடுகள் இடம்பெற்றன.அங்கே அவர்கள் பரிசுத்தமாக வாழ்வதற்கான சட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள், அத்துடன் கர்த்தருடன் கூட வாழ்வதற்கான பலிகளையும் செலுத்தினார்கள். தற்செயலாக செய்த பாவத்திற்காகவும் அல்லது மதசார்பாக அசுத்தமடைந்ததற்குமான பலியாகவும் ஒரு ஆசாரியன் தான் விரும்பிய பகுதியைப் பாவ நிவாரண பலியாக தகனிக்கிறார்.
பலிசெலுத்ததுவதற்காக கொண்டு வரப்படும் விலங்குகள் யாவும் பழுதற்றவையாக

இருக்க வேண்டும்.லே4:23,28 இதற்கோப்பாகவே இயேசு கிறிஸ்துவும் பாவம் செய்யாத பரிசுத்தர் நமக்காக பலியானார்.
பலிபீடத்தின் அக்கினி தொடர்ந்து எரிந்துகொண்டிருக்கவேண்டும். (லே6:13) நெருப்பு அணைந்து போகாதவாறு கண்காணிக்க வேண்டியது ஆசாரியனது கடமை.
இன்று புதிய உடன்படிக்கையின் கீழிருப்பதால் நாமனைவரும் ஆசரியர்களே.(1பேது2:9) வெளி 1:6,5:9-10) நாமனைவரும் ஆவியில் நிறைந்தாவர்களாகவும்,ஆவியில் அனலாயிருக்க வேண்டும்.தேவனுடனிருக்கும் உறாவு முறியாது பரிசுத்தமும், கீழ்படிவு நிறைந்த வாழ்வு வாழவேண்டும்.





.

**லேவியர் ஆகம இறையியல் சுருக்கம்**.

I. காணிக்கைகள் எப்படிக் கொடுப்பது. 1-10

A. பலிசெலுத்துதல் அவசியம். 1-7 B.

ஆசாரியர்கள் அபிஷேகம் செய்யப்படல். 8-10

II. எப்படி சுத்தமாக இருப்பது. 11-15

III. எல்லோருக்குமான பரிகாரம் செய்வது எப்படி 16

IV. பரிசுத்தமாக எப்படி வாழ்வது. 17-22

A. எல்லோருக்குமான சட்ட ஒழுங்கு. 17-20 B.

ஆசாரியர்களுக்கான சட்ட ஒழுங்கு. 21-22

V. எப்படி கர்த்தரை ஆராதிப்பது. 23-27

A. அவரது பிரசன்னத்தை எப்படிக் கொண்டாடுவது. 23:1-24:9

B. அவரது விருப்பத்திற்கிணங்க சேவை செய்வது. 24:10-27:34

**லேவியர் ஆகமச்சுருக்கம்**

I. பலிசெலுத்துவதற்கான சட்டங்கள். (1:1-7:38)

A. தகன பலிகள் (1:1-17).

B. தானியப் பலி (2:1-16)

C. சமாதான பலி (3:1-17)

D. பாவநிவாரண பலி (4:1-5:13)

E. குற்ற நிவாரணபலி (5:14-6:7)

F. மேலதிகமான சட்டங்கள். (6:8-7:38)

II. ஆசாரியர்களின் பிரதிஷ்டை (8:1-10:20)

A. பண்டிகைகள் (8-13)

B. தேவையான பலிகள்.(8:14-9:24)

C. நாதாப் அபியூ (10:1-7)

D. ஆசாரியர்களுக்கான மேலதிக சட்டங்கள். (10:8-20)

III. பரிசுத்தம், பரிசுத்தம் அல்லாததை அறிதல். (11:1-15:33)

A. சுத்தமான மிருகங்கள். (11:1-47)

B. தாய்மாரைச் சுத்திகரித்தல். (12:1-8)

C. தோல்வியாதிகளுக்கான சட்டம். (13:1-14:57)

D. சரீர வெளியெற்றத்திற்கான சட்டம். (15:1-33)

IV. பரிகாரத்திற்கான நாள். (16:1-34)

**V. பரிசுத்த ஜீவித்திற்கான சட்டங்கள்**. (17:1-22:33)

A. சாப்பிடுவதற்கான சட்டங்கள். (17:1-16)

B. பாலியல் வெளிப்பாட்டிற்கான சட்டங்கள். (18:1-30)

C. நாளாந்தவழ்விற்கான சட்டங்கள். (19:1-37)

D. விஷேடமான பாவங்களுக்கான குற்றங்கள். (20:1-27)

E. ஆசாரியர்களுக்கான சட்டங்கள். (21:1-22:33)

VI. ஆராதனைப் பண்டிகைகள். (23:1-44)

VII. கீழ்ப்படிதலுக்கான ஆராதனை.(24:1-27:34)

A. ஆராதனையின் சிறப்பு (24:1-23)

B. மனதுருக்கமான ஆராதனை (25:1-55)

C. தண்டனையும், வெகுமதியும். (26:1-46)

D. ஆராதனைக்கான அர்ப்பணிப்பு (27:1-34)

**லேவியர் ஆகமம்.1-7**

**பலவகையான காணிக்கைகளுக்கான நியாயப்பிரமாணத்தைக் கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டார்.**

| தனிப்பட்ட இஸ்ரவேலரால் கொண்டுவரப்படும் காணிக்கைகள். | | | |
|---|---|---|---|
| பெயர். | பொருளடக்கம் | செயற்பாடு | முக்கியத்துவம் |
| தகனபலி லேவி. 1; 6:8-13 | காளை,செம்மறி, ஆண் ஆடு, அல்லது (வறுமையானவர்களுக் கானது) பழுதற்ற ஆண்புறா | .பலியிடுபவர் பலியின் தலையின்மீது கைகளை வைக்க வேண்டும்.அவர் அதைக் கொன்று,வெட்டித் துப்பரவு செய்ய வேண்டும். ஆசாரியர் அதன் இரத்தத்தை பலிபீடத்தின்மீது ஊற்றுவார், உடலை | இந்த விருப்பமான காணிக்கை கர்த்தரிடத்தில் தன்னை முற்றிலும் அர்ப்பணிப்பதற்கானஅடையாளமாகும். |

| | | | |
|---|---|---|---|
| | | தகனிப்பார். | |
| தானியபலி லேவி 2; 6:14-23 | தானியம், மாவு, அல்லது அப்பம் இவற்றுடன் ஒலிவ எண்ணெய்யும், உப்பும் அனால் புளிப்பில்லதவைகளாக இருத்தல் வேண்டும் | இந்த உணவு பலியிடுபவரால் தயாரிக்கப்படும். ஆசாரியன் அதில்கையளவு எடுத்து தகனிப்பார், மிகுதிதை உணவாகப் பயன்படுத்துவார். | இந்த விருப்பமான காணிக்கை தகன பலியாகும். இது கர்த்தரைத் தியானம் செய்வதற்கான அடையாளமாகும். |
| சமாதான பலிலேவி 3; 7:11-36 | ஆட்டு அல்லது மாட்டு மந்தையிலிருந்து, பழுதற்ற ஒரு மிருகம். | பலியிடுபவர் பலியின் தலை மீதுகைகளை வைப்பார்.அதைக் கொல்லுவார். ஆசாரியன் இரத்தத்தை பலிபீடத்தில் ஊற்றுவார். இதில் ஒருபகுதி ஆராதிப்பவரினரிலும் அவர் குடும்பத்திகாலும் சாப்பிடப்படும். | இந்தக் காணிக்கையானது கர்த்தருடன் சமாதானமாக இருப்பதற்கான அடையாளமாகும்.மற்றும் ஆசீர்வாதங்களுக்கான நன்றி செலுத்துதலுமாகும். |
| பாவ காணிக்கைகள் லேவி 4:1-5:13; 6:24-30; 12:6-8; 14:12-14 | பலியிடுபவரின் நிலைவரத்திற்கும் தன்மைக்கும் ஏற்ப விஷேசித்த மிருகம் தேவை வறுமையானவர்கள் நல்ல மாவு காணிக்கையாக கொண்டுவரலாம். | பலியிடுபவர் பலியின் தலைமீதுகைகளை வைப்பார்..அதைக் கொல்லுவார். ஆசாரியன் இரத்தத்தை பலிபீடத்தில் ஊற்றுவார்.. நல்ல உடல் தகனிக்கப்படும், | .பாவத்திற்கு அல்லது அசுத்தத்திற்கான காணிக்கைகள். தலையில் கைகளைவைப்பது என்பது, பலியிடுபவரின் அடையாளத்தையும், பாவ நிவாரண பலியையும் உறுதிப்படுத்துகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | | மிகுதி அவரின் சாப்பாட்டிற்குப் பயன்னடுத்துவார். | |
| குற்ற நிவாரண பலிலேவி 5:14-6:7; 7:1-6; 14:12-18 | பழுதற்ற செம்மறி அல்லது ஆட்டுக்குட்டி | உரிமையாளரிடம் 1/5 சேர்த்துக் கொடுத்தல் வேண்டும். அதன் பின்பு தன்னுடைய கைகளை, பலியின் தலையில் வைக்க வேண்டும், அதனைக் கொல்ல வேண்டும். ஆசாரியனினால் பலிபீடத்தைச் சுற்றியுள்ள நிலத்தில் இரத்தம் ஊற்றப்படல் வேண்டும். நல்ல பகுதிகள் தகனிக்கப்படும், மிகுதி ஆசாரியனுக்கு உரியவை. | மற்றவர்களுடைய பொருட்களைக் களவாடியபோது இந்தக் காணிக்கை கொடுக்கப்படும். குஸ்டம் மாறிய போதும் இந்தக் காணிக்கை கொடுக்கப்படும். |

1:1-6:7இல் கூறப்பட்ட நியாயப்பிரமாணங்கள் ஜனங்களுக்கானவையாகும் ஆசாரியர்களுக்கான மேலதிகமான நியாயப்பிரமாணங்கள் 6:8-7:38.இல் கூறப்பட்டுள்ளன. குற்றநிவாரணபலி ((6:1-7)கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டியவை. சடங்காச்சாரத்திலோ அல்லது நீதிக்குற்றத்திலோ குற்றமிழைத்திருந்தால் அவர்

தன்னுடைய குற்றத்தை அறிக்கையிடல் வேண்டும். அத்துடன் மிருகம் ஒன்றைப் பலியிடுவதற்காக ஆசாரியனிடத்திற்கு கொண்டுவரல் வேண்டும்.

பழைய ஏற்பாட்டுக் காலத்தில் பலிசெலுத்தும் நடைமுறையினால், இஸ்ரவேல் விசுவாசிகள் தங்கள் பாவங்களுக்கா அறிக்கைசெய்து பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள முடியும், தங்கள் நன்றிகளைத் தெரிவிக்கமுடியும், அத்துடன் கர்த்தருடன் மிக நெருக்கமாக உறவாடவும் முடியும்.

5:6: செய்த பாவத்திற்கு இப்போதும் எப்போதும் பாவமன்னிப்புத் தேடல் வேண்டும். கர்த்தர் தன்னுடைய பிள்ளைகளை பரித்தமாகும்படியும், தன்னை ஆராதிக்கும்படியும், அவர்களைத் தன்னருகே இழுத்துக் கொள்கிறார்.

**அறியாமல் செய்யும் பாவம். (4:2).** தனிப்பட்ட ஒருவர் அறியாமல் செய்த பாவத்திற்கு மன்னிப்புத் தேடமுடியும். . வருடாந்த பாவப் பரிகார நாளில் கர்த்தருடைய ஜனங்கள் செய்த பாவங்களுக்காக பிரதான ஆசாரியன் ஒரு பலியைச் செலுத்துவார்.( லேவி 16).தெரிந்து செய்கின்ற பாவத்திற்கும், தெரியாமல் செய்கின்ற பாவத்திற்கும் இடையில் வித்தியாசம் உண்டு.

**அவன் அறிக்கை செய்தல் வேண்டும். (5:5-6).** பாவ அறிக்கை செய்வது விருப்பத்திற்குரியதல்ல. கர்த்தருடன் தொடர்புடன் இருந்து வாழ்வதற்கு நாம் பாவ மன்னிப்பைத் தேடிப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**குற்றம். (5:15).** தற்காலத்தில் குற்றம் என்பது ஒரு உணர்வாகும்.வேதாகமம் குற்றத்தை ஒரு செயற்பாடாகக் கருதுகின்றது. பழைய ஏற்பாட்டில் குற்றம் என்பது (எபி, *`asam*) மூன்று பண்புக ளைக் கொண்டது. (1)**பாவத்தை விளைவிக்கும் ஒரு செயற்பாடு**. (2) **பாவத்தை விழைவிக்கும் ஒரு நிபந்தனை இருக்கிறது, அதை இந்தச் செயற்பாடு செய்கிறது.** (3) **அந்தச் செயற்பாட்டுக்குரிய தண்டனை இருக்கிறது.** குற்றம் என்று சொல்லும் போது இந்த மூன்றில் ஒன்றைச் செய்திருக்கின்றது. ஆனால் எல்லா வேளைகளிலும் இதன் ஆதாரம் குறிப்பாகத் தெரியும். புதிய ஏற்பாட்டில் குற்றம் என்பது சட்டம் சம்பந்தமான செயற்பாடாகும். குற்றம் செய்தவர் குற்றவாளி எனக் குற்றம் சுமத்தப்படுவார்.இரண்டு ஏற்பாடுகளிலும் குற்றம் என்பது கர்த்தருக்கு எதிரான செயற்பாடாகக் கருதப்படுகின்றது.கர்த்தர் அன்பானவர், அதனால் அவர் குற்றம் செய்த பாவிகளுக்காக தண்டனையிலிருந்து தப்புவதற்கான ஒரு வழியை ஏற்பாடுசெய்து தன்னுடன் சமாதானமாக இருக்கும் செயற்பாட்டைச் செய்துள்ளார். இதுதான் லேவியர் ஆகமத்திலுள்ள வெற்றிகரமான

ஒரு நற்செய்தியாகும். அவருடைய பலியானது இயேசுக் கிறிஸ்த்துவின் பலியை ஒத்திருக்கின்றது.இயேசுவின் இரத்தம் எங்கள் எல்லாருடைய பாவத்தையும் கழுவிச் சுத்திகரிக்கின்றது. (எபி 9:11-28).

**உரிமையாளரிடம் திரும்ப ஒப்படைத்தல். (6:1-7).** மற்றவர்களுக்கு எதிரானபாவமும் கர்த்தருக்கு எதிரானபாவம்.ஒரு மனிதன் களவுசெய்து, அல்லது இன்னுமொருத்தரை ஏமாற்றி குற்றம் செய்தால், அவன் குற்றநிவாரணபலியைக் கர்த்தருக்கு செலுத்தல் வேண்டும். குற்றமிழைக்கப்பட்வருக்கு இழந்த பொருளைத் திரும்ப ஒப்படைத்த பிற்பாடே இதைச் செய்தல் வேண்டும். இதனால்த்தான் புதிய ஏற்பாட்டில் இயேசு இவ்வாறு கூறுவதைப் பார்க்கிறோம்.ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.(மத் 5:23-24).கர்த்தரை ஆராய்வதற்கு நாம் மற்றவர்களிடமும் சரியாக இருத்தல் வேண்டும்.

**லேவியர் ஆகமம்**. **8**

அதிகாரச் சுருக்கம்.

கர்த்தருடைய ஜனங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மோசே ஆரோனையும்,அவரது மகன்மாரையும் ஆசாரியர்களாக அபிஷேகம் செய்தார். (8:1-4 ஆரோன் ஆசாரியர்களுக்கான உடையைத் தரித்திருந்தார். (வச 5-9) ஆராதனை நிலையத்தையும், அதிலுள்ள உபகரணங்கள் யாவற்றையும், அபிஷேக தைலத்தினால் அபிஷேகம் செய்தார்.(வச10-13), மனப்பூர்வமான பலிகள் செலுத்தப்பட்டன (வச 14-29). ஆரோனும் அவரது ஆண்மக்களும் அபிஷேக தைலத்தினாலும், இரத்தத்தினாலும் அபிஷேகம்பண்ணப்பட்டார்கள், அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் ஏழுநாட்கள் தங்கும்படி வேண்டப்பட்டார்கள். (வச 30-36).அபிஷேக ஆராதனை மக்கள் மனதில் நன்கு பதியும் படியாக அலங்காரம் செய்யப்பட்டது, ஆரேன் அவரது மகன்மார்கள் ஆகியோரின் கர்த்தரின் ஆராதிக்கும் பங்கு எவ்வளவு முக்கியம் என்பது வலியுறுத்தப்பட்டது.

- ஆசாரியர்கள் மற்றவர்களுக்கான பாவ நிவர்த்தி செய்யும் முன்பாக தங்களுக்காக பாவ நிவர்த்தி செய்தல் வேண்டும்.
- கர்த்தரை ஆராதிப்பது மிக அவசியமானதாகும்.
- ஆரோன் பிரதான ஆசாரியனின் உடையில் காணப்பட்டார்.ஒவ்வொரு உடையும் கர்த்தரால் வடிவமைக்கப்பட்டவையாகும். ஒவ்வொன்றும் ஆவிக்குரிய முக்கியத்தும் கொண்டவையாகும்.



**அபிஷேகம் செய்தல்.** ஆசாரியர்கள் மற்ற இஸ்ரவேலர்களிடமிருந்த எப்போதும் பிரிந்து வாழவேண்டும் என்பது ஒரு சரித்திர நிகழ்வுகளாகும். . இயேசுக் கிறிஸ்த்துவின் காலத்திற்குப் பின்பும், ஆரோனின் சந்ததியார் மட்டும் ஆசாரியத்துவத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்குரிய மனைவி எந்தவிதக் கலப்பற்ற இஸ்ரவேலர்களாக இருத்தல் வேண்டும். இன்று ஒவ்வொரு விசுவாசியும் ஆசாரியர்களே, சுவீகரிக்கப்பட்ட கர்த்தருடைய குடும்பத்தின் அங்கத்தவர்களாகும். (1 பேது 2:5).இதைவிட பெரிய சுதந்திரம் ஒன்றுமில்லை.

**காது,வலது கைபெருவிரல், வலது காலின் பெருவிரல்கள். (8:22-23).**

சரீரத்தின் இந்தப்பகுதிகளை இரத்தத்தினால் தொடுவது என்பதன் அர்த்தம், ஆசாரியர்கள் எப்போதும் கர்த்தரின் சத்தத்தைக் கேட்க ஆயத்தமாக இருத்தல் வேண்டும், அவருக்கு ஊழியம் செய்வதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும், எப்போதும் அவரைப் பின்பற்ற ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

**விட்டுவிலக வேண்டாம்.** **(8:33).** பிரதிஷ்டையின் நாட்கள் நிறைவேறும் வரைக்கும், ஏழுநாள் ஆசரிப்புக் கூடாரவாசலை விட்டுப் புறப்படாதிருந்து, ஏழுநாளளவும் பிரதிஷ்டைப் படுத்தப்பட்டார்கள். இந்த நடவடிக்கையானது ஆசாரியர்கள் ஜனத்தாரிடமிருந்து வேறுபிரிக்கப்படவும், கர்த்தருக்காக வேறு பிரிந்து வாழ்வதையும் விளக்குகின்றது. ஆனால் இது இன்னும் பலவற்றைக் கொண்டுள்ளது .நாளாந்தம் கர்த்தருடைய பிரசன்னத்தில் வாழ்பவர்களால் மட்டுமே கர்த்தரை சிறப்பாக ஆராதிக்க முடியும் நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய வேண்டுமாயின் கர்த்தருடன் நெருக்கமாக இருத்தல் வேண்டும்.

**லேவியர் ஆகமம்**. **9-10**

புதிதாக அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியர்கள் ஊழியத்தைத் தொடங்கினார்கள். நியாயப் பிரமாணத்தில் கூறப்பட்ட பாவநிவாரண பலியையும், மற்றய அனைத்துப் பலிகளையும் செய்தார்கள். (9:1-21). பலிகள் நிறைவு செய்யப்பட்டபின்பு, ஆரோன் ஜனங்களை ஆசீர்வதிப்பதற்காகத் திரும்பினார். (வச 22).கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்துவிட்டது; இது இஸ்ரவேலர்களின் பலி ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதாகும். அத்துடன் ஆரோனின் ஆசீர்வதித்தலும் எற்றுக் கொள்ளப்பட்டதாகும். (வச. 23-24).

ஆரோனின் மகனான நாதாப், அபியூ, என்பவர்கள் பலிபீடத்தில் எற்றிய அந்நிய அக்கினியைக் கர்த்தர் ஏற்றுக் கொள்ளவில்லை, அதனால் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டுவந்த அக்கினி அவர்கள் இருவரையும் பட்சித்து.

தேசத்தின் பரிசுத்தத்தைக் காத்துக் கொள்வதே, ஆசாரியர்களின் கடமையாகும். கர்த்தருடைய வார்த்தைக்கு உண்மையாக இருந்து தங்களைப் பரிசுத்தமாகக் காத்துக் கொள்வதே ஆசாரியர்களின் கடமையாகும்.(10:1-5). ஆரோனும் மிகுதியான மகன்மாரும் மரணச்சடங்கில் பங்குபற்ற அனுமதிக்கப்படவில்லை.(வச 6-7), அm,ம்னால் அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யும் படி வேண்டப்பட்டார்கள். (வச 8-20).

**முக்கிய வசனம்**. 10:3:. கர்த்தரைத் தேடுபவர்கள், அவருக்குக் கீழ்ப்படிந்து கர்த்தரைக் கனம்பண்ணுதல் வேண்டும்.

- கர்த்தரை நாம் அசட்டைபண்ணக் கூடாது.
- பரிசுத்தமும் ஆசாரியத்துவமும்.

### திராட்சரசத்தையும் மதுவையும் குடிக்கவேண்டாம். (10:8-11).

ஆசாரியர்களுக்கு திராட்சைரசமும், மதுவும் தடைசெய்யப்பட்டுள்ள, அதனாலேயே நாதாப்பும், அபியூவிற்கும் இந்த நிலை ஏற்பட்டது. ஆசாரியர்கள் சுத்தத்திற்கும், அசுத்தத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்திருந்து, இஸ்ரவேலர்கள் எப்படி கர்த்தரைச் சந்தோஷப்படுத்தலாம் என்று ஜனங்களுக்குப் போதிக்க வேண்டும்.

இந்த உயர்ந்த அழைப்புக்கு ஒவ்வொரு பகுதியிலும் அவதானமாக இருக்க வேண்டும். வேதாகமம் திராட்சைரசம் அருந்துவதை தடைசெய்யவில்லை. ஆனால் மேலதிகமாகப் பாவிக்கக் கூடாது.மதுபானம் அருந்துதல் பழைய ஏற்பட்டில் அருவருக்கத்தக்கது.இருந்தும் ஆசாரியர்கள் ஊழியம்செய்யும்போது மது அருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. நாம் மதுபானம் அருந்தாமல் இருந்தால்தான் மற்றவர்களை மதுபானம் அருந்தவேண்டாம் என்று ஆலோசனை செய்ய முடியும்.

**பரிசுத்தம்..**

பரிசுத்தம் என்ற வார்த்தை எபிரேய பாஷையில் ***qadas.*** என்பதாகும். இதன் அர்த்தம் அர்ப்பணம் செய்தல் அல்லது வேறுபிரிந்து வாழ்தல் என்பதாகும். இதன் அர்த்தம் கர்த்தருடைய சேவைக்காக வேறுபிருந்து வாழ்வதாகும். அதாவது தெய்வத்துக்குரிய சாதாரண வாழ்விலிருந்து விலக்கப்பட்டவாழ்வாகும்.பழைய ஏற்பாட்டில் ஆராதனைக்குரிய சகலதும் வேறு பிரிக்கப்பட்ன, அதுதான் தெய்வத்துக்குரியதாகும்.

கர்த்தருடைய ராஜ்ஜியம் பரிசுத்தமானபடியால், கர்த்தர் அதிக கனத்திற்குரியவராவர், பரிசுத்தத்தோடு தொடர்புள்ளயாவும் அதிகூடிய கவனத்துடனும் மதிப்புடனும் நடத்தப்படல் வேண்டும்.

எப்படி தூபவர்க்கம் காட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து தவறி கர்த்தரை நாதாபும் அபியூவும் கர்த்தரை அவமதித்தார்கள்., அந்த அவமதிப்பு பாராமுகமாக விடப்படவில்லை,அவர்கள் இருவரையும் அக்கினி பட்சித்து இஸ்ரவேலர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பித்தன. கர்த்தர் பரிசுத்தமாக இருக்கிறபடியால் அவரை எப்போதும் நாம் கனம் பண்ண வேண்டும்.மதச்சடங்குகள் கர்த்தர் உருவாக்கினது போலப் பேணப்படல் வேண்டும். நீதிச் செயற்பாடுகள் கர்த்தர் வழிநடத்துவதுபோல செய்யப்படல் வேண்டும். நாம் செய்யும் எல்லா வற்றிலும் கர்த்தர் பரிசுத்தர் என்பதை நினைக்க வேண்டும். அத்துடன் எங்கள் அதிகூடிய கனத்தையும் அவருக்குக் கொடுக்க வேண்டும்.

**ஆசாரியப்பதவி**

**லேவியர் ஆகமம்.** **9-10** இங்கு பலவிதமான ஆசாரிய ஊழியங்களைக் காணமுடிகிறது. ஆசாரியர்கள் மற்றவர்களுக்கான பலியையும் காணிக்கையையும் கர்த்தர் சமூகத்திற்கு கொண்டு செல்கிறார்கள்.

ஆசாரியர்கள் காணிக்கையையும், பலிகளையும் கர்த்தர் சமூகத்திற்குக் கொண்டு செல்வதுமன்றி ஆராதனையையும் வழி நடத்துகின்றார்.அங்கே பரிசுத்தத்திற்கும், பரிசுத்தம் அல்லாத விடயங்களுக்கும் இடையில் காணப்படும் விடயங்கள் வெளிப்படுத்தப்படும். (10:10). அங்கே கர்த்தருடைய பிரமாணங்கள் யாவும் போதிக்கப்படும். (வச 11). ஆனாலும் அங்கே இன்னும் பல காரியங்கள் இடம்பெறும்.

ஆசாரியர்கள் ஆராதனை செய்பவர்களின் அசுத்தமான நோய்களை இனம் காணுவார்கள். (லேவி13-14). அவற்றில் குணமடைந்தவர்கள் ஆசாரியரினால் பரிசுத்தப்படுத்தப்படுவார்கள்

(லேவி 14). பலிக்காகக் கொண்டுவரப்படும் பலிகளின் திடகாத்திரமும் சுகாதாரமும் பரிசோதிக்கப்படும். (22:17-21). கர்த்தருக்கு என்று கொடுக்கப்படும் பொருள்களுக்குரிய பெறுமதியை ஆசாரியர்கள் கணக்கிடுவார்கள். (லேவி 27). அவர்கள் ஆசாரிப்புக் கூடாரத்தின் நிலையைக் கவனித்து மேற்பார்வை செய்வார்கள். (எண். 3; 4). ஆசாரியர்கள் சகல பண்டிகைக் காலங்களையும் அறிவிப்பார்கள். (லேவி. 25:9).சிக்கலான வழக்குகளை ஆசாரியர்களே பிரதான நீதிமன்றில் விசாரிப்பார்கள். (உபா 17:11). இஸ்ரவேல் தலைவர்களின் கேள்விகளுக்கு **ஊரீம்**,**தும்மீம்** முறைமூலம் கர்த்தரின் பதில் கூறப்படும். (எண் 27:21 ஆசாரியர்கள யுத்தத்திற்குச் செல்லும் சேனைகளுடன் சென்று, அவர்களை கர்த்தர்மீது நம்பிக்கைகொள்ளச் செய்தல் வேண்டும். (.உபா 20:1-4). சுருக்கமாகக் கூறுவதாயின் ஆசாரியர்கள் இஸ்ரவேலர்களின் விசுவாசத்தின் பாதுகாவலர்களாக இருத்தல் வேண்டும்.அவர்களது கடமைகள் மதசார் பானது மட்டுமல்லாமல், எல்லா இஸ்ரவேலர்களின் வாழ்வின் சகல பகுதிகளிலும் கர்த்தருடனான உறவை வலுப்படுத்தல் வேண்டும்.

**லேவியர் ஆகமம் 11**

இந்த அதிகாரம் மதம் சார்ந்த சுத்தம், அசுத்தம் என்பவற்றைப்பற்றிக் கூறுகின்றது.

இஸ்ரவேலில் ஒரு மனிதன் துப்பரவு இல்லாது இருந்தால், அவன் கர்த்தரின் ஆராதனையில் பங்கு பற்ற முடியாது.

மிருகங்களும், மற்றும் பொருள்களும், மனிதர்கள் போல் அசுத்தமடையக் கூடியவையாகும், அதுமட்டுமல்லாமல் அங்கு வருபவர்கள் அவற்றைத் தொடும்போது அசுத்தத்தை பரப்பக் கூடியவையுமாகும். இங்கு அசுத்தமான மிருகங்களும்,அசுத்தமல்லாத மிருகங்களில் பட்டியல் மோசேயினால் கொடுக்கப்பட்டுள்ளது.

தீட்டுள்ள மிருகங்கள் மனிதரால் சாப்பிடப்படவோ அல்லது பலியிடப்படப்படவோ கூடாது. வீட்டுமிருகங்கள், காட்டுமிருகங்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. (11:1-8, 26-28),மீனும், ஜலத்தில் வாழும் பிராணிகளும் (வச. 9-12), பறவைகள் (வச13-19), பறக்கும் உயிரினங்கள் (வச. 20-23), பூமியில் நடமாடும் ஜீவராசிகள். (வச 24-31). சுத்தமானவைகளின் விபரமானபட்டியலும், அசுத்தமானவையுடன் தொடர்பு ஏற்படும்போது அசுத்தமடையும் பிராணிகளின் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளது. (வச 32-47).

- 11:44: தரையில் ஊருகிற எந்தப் பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல், உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக.
- எங்கள் நாளாந்த தெரிவுகள் யாவும் ,கர்த்தருக்கு நாம் செய்ய தனிப்பட்ட பிரதிஸ்டையைப் பிரதிபலிப்பவையாக இருத்தல் வேண்டும்.

**சுத்தமும் அசுத்தமும். .**

சுத்தம், அசுத்தம் என்பவைகள் ஒரு மனிதன் கர்த்துடன் மேற் கொள்ளும் உறவின் வலிமை குறித்துப் பேசுகின்றது. லேவியராகமத்தில் கூறப்பட்டுள்ள தீட்டுள்ளதும், தீட்டற்றதும் மதச் சார்பான வார்த்தைகளாகும்.. தீட்டுள்ள மனிதன் ஆராதனையில் பங்குபற்ற முடியாது. அத்துடன் பலியிடப்பட்டவற்றையும் உண்ணமுடியாது. (எண். 5:1-4). சில விடயங்களில் தீட்டுள்ளமனுஷன் மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவார். (லேவி. 13:45-46). லேவியர் ஆகமம் அடுத்த அதிகாரத்தில் **பிறப்பு, பாலியல், சுகாதாரம், மற்றும் உணவு** என்பவற்றிற்கான தீட்டுள்ளதும், தீட்டற்றதுக்குமான அடிப்படை விபரங்களைக் கூறுகின்றது, இந்தப்பிரமாணங்களைக் கடைப் பிடிப்பதற்கான அவசியம் பற்றி கர்த்தர் தன்னுடைய விருப்பத்தை வெளிப் படுத்தியுள்ளார், ஜனங்களின் ஒவ்வொருவிடயத்திலும் கர்த்தருடன் தொடர்புள்ளவர்களாக இருத்தல் வேண்டும். பிற்பாடு இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள், நன்நடத்தை சம்பந்தமான விடயங்களில் தீட்டுபடாமல் இருக்க வேண்டும் என்று கூறிவந்தார்கள். பாவம் மனிதர்களைத் தீட்டுப்படுத்தும் என்றும் அதனால் பாவிகள்

கர்த்தர் சமூகத்திலிருந்து அறுப்புண்டு போவார்கள் என்றும் துணிகரமாக அவர்கள் தங்கள் கிரியைகளினால் அசுத்தமாகி, தங்கள் செய்கைகளினால் சோரம்போனார்கள் என்று சங்கீதக்காரன் கூறுகின்றார். . (சங். 106:39). . தீட்டுப்படுதல் என்பது ஆவிக்குரிய விடயத்தில் முக்கியத்தும் பெறுகின்றது, அத்துடன் பாவம் நம்மைக் கர்த்தரிடமிருந்து வேறுபிரிக்கின்றது. பரிசுத்தமாக்கப்பட்ட பாவியே கர்த்தரிடத்தில் சேரமுடியும்.

**ஏன் தோல்விகள். ?**

மனிதர்களின் சுகாதரம் கர்த்தருடைய பிரமாணங்களில் நடப்பதன்மூலம் காக்கப்படுகின்றன. இன்றும் கூட பலர் பண்றி இறைச்சி சாப்பிடுதல் சுகாதராத்திற்கு கேடுவிழைவிக்கும் என்று பலர் கூறுகின்றார்கள். பன்றியானது உண்மையில் அசுத்தமானதும் தீட்டானதுமாகும். புதிய எற்பாட்டில் பரிசுத்த பவுல் எந்த உணவும் தீட்டானது அல்ல என்று கூறுகின்றார். மதசார்பான பிரமாணங்கள் ஆவிக்குரிய நோக்கங்களைக் கொண்டவையாகும். அவைகள் இஸ்ரவேலர்களை கர்த்தருக்காக பிரிந்து வாழ்பவராக்குகின்றது. அத்துடன் தன்னுடைய பிள்ளைகளைத் தீட்டுப்படாமல் பாதுகாக்கின்றது.

**துப்பரவு படுத்தல்.**

மதசார்பான அசுத்தம் நிரந்தரமானதல்ல. . சில தனிப்பட்ட மனிதர்கள் சில விடயங்களில் தீட்டுப்பட்டிருந்தால், வேறுவழிகளில் தங்களை மீண்டும் துப்பரவாக்கிக் கொள்ள முடியும்.

திரும்பவும் பழைய நிலைக்கு வருவதில் குறிப்பிட்ட அம்சங்கள் காணப்படுகின்றன. (1)ஒரு மனிதன் தீட்டுப்பட்டிக்கும் காலம். (2) தண்ணீரால் கழுவுதல் அல்லது பலியிடப்பட்ட இரத்தத்தினால் பரிசுத்தப் படுத்தல். பாவம் கர்த்தருடைய பிள்ளைகளைத் தீட்டுப்படுத்துகின்றன. ஆனால் அவர்கள் தங்கள் பாவத்திலிருந்து துப்பரவாக்கப்பட்டு மீண்டும் கர்த்தருடன் சரியாக முடியும், ஏரேமியா குளறியபடி நற்செய்தியைக் கூறினார், “அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்த அவர்களுடைய எல்லா அக்கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து, அவர்கள் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணின அவர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்பேன்” 33:8),ஏசயா கூறிகின்றார், “உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல்

வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்". இங்கு நல்ல செய்தி என்ன வென்றால், பாவம் நிரந்தரமாக எம்மைக் கர்த்தரை விட்டுப் பிரிக்காது. நாம் அவருக்கு அருகே வந்து அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டு பரிசுத்தம் அடையலாம். (எபி 9:22).

**லேவியர் ஆகமம் 12-15**

**தீட்டுப்படுதல் சம்பந்தமான விடயங்கள் இந்த அதிகாரத்தில் மிகத் தெளிவாகக் கூறப்படுகின்றன.**

இங்கு கூறப்படுபவை யாவும் ஆராதிப்பவர் விருப்பத்துடன் செய்யும் பாவங்களல்ல, ஆனால் இவற்றால் ஏற்படும் தீட்டுக்கள் நீக்கப்படுவதற்கான வழிமுறைகள் இங்கு கூறப்படுகின்றன. இவைகளாவன குழந்தை பிறப்புமூலம் ஏற்படும் தீட்டு. (12:1-8) தொற்றக்கூடிய தோல்வியாதி. குஷ்டம் (13:1-46), உடுப்பில் கறை ஏற்படுதல். (வச. 47-59), கட்டிடங்களில் கறை ஏற்படுதல். (14:33-57). தோல் வியாதி குணமாகினபின்பு, அந்த மனிதன் எப்படி பரிசுத்தமாக்கப்படல் வேண்டும் என்பது சம்பந்தமாக சிறப்பான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. (வச 1-32). சரீரத்திலிருந்து பால் உறுப்பு மூலமாக வெளியேற்றப்படுபவை மனிதனைத் தீட்டுப்படுத்தும்,அது மட்டுமல்லாமல் கட்டி போன்ற நோயிலிருந்து வெளியேறுபவையும் மனிதனைத் தீட்டுப்படுத்தும்.

ஒருவனிலிருந்து இந்திரியம் கழிந்ததுண்டானால், சூதகஸ்திரீ தன் சரீரத்திலுள்ள உதிர ஊறலினிமித்தம் அவர்கள் தீட்டுப்பட்டவர்களாகும். ( வச. 16-33).

- **பிரதான வார்த்தை;-** 14:19-20: இவ்வாறான தீட்டுக்களிலிருந்து துப்பரவு அடைவதற்கு கர்த்தர் வழிமுறைகளை ஏற்பாடு செய்துள்ளார்.
- கர்த்தருடன் உள்ள உறவைப் பாதிக்கும் எந்தவிடயத்திலும் உணர்வுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் கர்த்தர் பக்கமாக உடனடியாகக் திரும்பிவிடல் வேண்டும்.
- **முக்கிய எண்ணக்கரு**. சுத்தம், அசுத்தம், ஆசாரியத்துவம்.

**குழந்தை பிரசவிப்பு. (12:6-7).** ஒரு குழந்தை பிரசவித்த பின்பு ஏன் பாவ நிவாரணபலி செலுத்தப்படல் வேண்டும்?சிலர் பாலியல் உறவினால் பரிசுத்தக் குலைச்சல் ஏற்பட்டுள்ளது என்று கூறுகின்றார்கள். பாவத்தினால் இன்னும் ஒரு உயிரை அந்த அம்மா உலகத்தில் கொண்டுவந்தாள். (. சங் 51:5). தயாரும் ஒரு தகன பலியைக்

கொண்டுவருவதை, முற்றிலுமாக கர்த்தருக்கு தன்னை அர்ப்பணிப்பதைப் பார்க்க கூடியதாக உள்ளது.கர்த்தர் பாவிகளை தன்னுடைய கிருபையினால் மன்னித்து, அவர்களால் செய்யப்படும் அர்ப்பணிப்புக்களையும் ஏற்றுக் கொள்கின்றார்

**"இரண்டு புறாக்கள்." (12:8).** ஆட்டுக்குட்டியைக் கொண்டு வர அவளுக்குச் சக்தியில்லாதிருந்தால், இரண்டு காட்டுப்புறாக்களையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது, ஒன்றைச் சர்வாங்க தகனபலியாகவும் மற்றொன்றைப் பாவநிவாரணபலியாகவும் கொண்டுவரக்கடவள்; அதினால் ஆசாரியன் அவளுக்காகப் பாவநிவிர்த்தி செய்யக்கடவன்; அப்பொழுது அவள் சுத்தமாவாள் என்று சொல் என்றார். வறியவர்கள் தங்களைச் சுத்தப்படுத்துவதற்கு விலை உயர்ந்த ஆடுகளைப் பலியாகக் கொடுக்க முடியாதவர்களாவார்கள்,அவர்கள் விஷேச திட்டத்தையும் கர்த்தர் ஏற்பாடு செய்துள்ளார். (14:21-22).மரியாளும் இயேசுவைப் பிரசவித்தபின்பு இவ்வாறான வறியவர்களுக்கான பலியையே செலுத்தினார்கள்.( லூக்கா 2:24).இந்தப் பிரமாணமானது வறியவர்களுக்காக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவையாகும். இயேசுவும் பணக்காரக் குடும்பத்தில் பிறக்காமல் ஏழைக் குடும்பத்திலேயே பிறந்தார்.

**குஷ்டம்..** எபிரேய பாஷையில் *sara'at* என்றும் கிரேக்க பாஷையில். *lepra* என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. "leprosy" என்பது பழைய ஆங்கிலச் சொல்லாகும். இவையாவும் தோல் அழற்சி,புண் என்பவற்றைக் குறிப்பவையாகும். குஷ்டம் என்பது ஒரு பயங்கர தொற்று வியாதியுமாகும்.

**ஆசாரியர்களின் பங்கு.** . ஆசாரியர்கள் வைத்தியர்கள் அல்ல, அல்லது வியாதிகளை சொஸ்த மடையச் செய்பவர்களுமல்ல. ஆசாரியர்கள் தீட்டுப்பட்டவர்களை அடையாளம் காணக் கூடியவர்களாவர், அத்துடன் அந்த வியாதியிலிருந்து குணமடைந்துவிட்டார்களா இல்லையா என்பதை உறுதிப்படுத்தக் கூடியவர்களுமாவர். (15:1-12).

**தனிமைப்படுத்தல். (13:45-46).** தொற்று நோய்உள்ளவர்கள் சுகாதார நன்மைக்காகத் தனிமைப் படுத்தப்படுவார்கள். அவர்கள் பாளயத்திற்குப் புறம்பே வைக்கப்படுவார்கள். இதனால் சமூகம் இந்த வியாதியின் தாக்கத்தினால் பாதிப்படையாமல் பாதுகாக்க முடியும். சின்னமுத்து, பொக்கிளிப்பான், காய்சல் என்பவை இவற்றிற்கான உதாரணங்களாகும். இவைகள் கொள்ளை நோய் என்றழைக்கப்படும்.இவ்வாறான சரீரத்திலிருந்து வெளியேறும் நோய்கள் உள்ளவர்களைத் தொட்டவர்கள் தங்களை நீரினால் கழுவி சுத்திகரித்துக் கொள்ளல் வேண்டும்.

**லேவியர் ஆகமம் 16**

கர்த்தர் மோசேயிடம் இரத்தத்தினால் பாவநிவர்த்தி செய்வதற்கு வருடத்திற்கு ஒரு முறை ஆசாரியர்களினால் செயற்படுத்துவதற்கான விசேட விதமான விளக்கங்களைக் கர்த்தர் கொடுத்துள்ளார். இந்த ஒரு நாளில் மட்டும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்வதற்கு அனுமதிக்கபபடுவார்கள். (16:1-19). இதன் தாக்கம் உயிரோடு இருக்கும் ஆட்டுக்குட்டியானது இஸ்ரவேலின் பாவத்தை சுமந்து கொண்டு காட்டுப்பகுதிக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். . (வச 20-22). மற்றப்பலிகள் யாவும் அறியாமற் செய்த பாவங்களுக்காக கொடுக்கப்படும் பலிகளாகும்.இந்தப் பலிமட்டும் இஸ்ரவேலர்கள் யாவருக்குமான பாவநிவாரண பலியாகும். இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய சகல பாவங்களுக்கும் பாவநிவிர்த்தி செய்வது, உங்களுக்கு நித்திய கட்டளையாயிருக்க க்கடவது என்று சொல் என்றார். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே ஆரோன் செய்தான். (வச. 34,). கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்படி, அந்நாளில் உங்களைச் சுத்திகரிக்கும் பொருட்டு,உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும். உங்களுக்கு அது விசேஷித்த ஓய்வு நாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; இது நித்திய கட்டளை. (வச 31).

- 16:34: கர்த்தர் எங்கள் பாவங்கள் யாவற்றையும் மன்னிக்கிறவர்.
- ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பாவநிவாரணம் செலுத்தப் போவதற்கு ஒப்பாக இயேசுக்கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் பாவ நிவாரணபலியாகத் தன்னை எங்களுக்காக ஒப்புக் கொடுத்ததை நாம் தியானிக்க வேண்டும்.

**கிருபாசனம். .** உடன்படிக்கைப் பெட்டியின் மூடியின் மேல், இரண்டு தங்கத்தினால் செய்யப் பட்ட பெட்டியின் மூடியை மறைத்துக் கொண்டு செட்டைகளை விரித்தபடி இருக்கின்ற தூதர்களைக் காணலாம் அதுவே **கிருபாசனம்** எனப்படும்.இங்கு ஒருவருடத்திற்கு ஒரு முறை பலியிடப்பட்ட இரத்தம் பிரதான ஆசாரியரினால் தெளிக்கப்படும். கர்த்தர் இந்த இரத்தத்தை ஏற்றுக் கொண்டு தன்னுடய ஜனத்தாரின் எல்லாப் பாவங்களையும் மன்னிப்பார்.



**பாவப்பரிகாரம். எபிரேயப் பாஷையில்** *kippur,* என்ற சொல் வேதாகமத்தில் பாவிக்கப் படுகின்றது.இது பாவத்துடனும், குற்றம், மன்னிப்பு என்பவற்றுடனும் பவத்தினாலான பலியுடன் தொடர்புடைய சொல்லாகும்.ஏழாம் மாதம் பத்தாம் தேதி இது கடைப்பிடிக்கப்படும்.பாவநிவிர்த்திக்காக இரண்டு ஆடுகள் கொண்டுவரப்பட வேண்டும் .ஒன்றை பலியிட வேண்டும் மற்றதை பாவ உணர்வு நீங்க போக்காடாக வனாந்திரத்தில் விட வேண்டும். பலியிடுதல் என்பது குற்றத்துடன் தொடர்புடைய சொல்லாகும், அதனால் கர்த்தர் மன்னிக்கிறார் அதனால் அவர்கள் கர்த்தருடன் மீண்டும் உறவைப் பேணிக் கொள்கின்றார்கள். பாவப்பரிகாரமானது புதிய ஏற்பாட்டில் இயேசு எங்களுடைய பாவத்திற்கு மரித்ததைக்குறிகின்றது. நாம் அனுபவிக்க வேண்டிய தண்டனையை இயேசு அனுபவித்தார். எங்கள் பாவத்தின் தண்டகைக்காகவே இயேசு சிலுவை சுமந்தர்.எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; (ரோமர் 3:23; (எபி. 9:23- 10:14. ).

**பலிபீடத்தில் பாவப்பரிகாரம்**?பழைய ஏற்பாட்டுக்கலத்தில் இடங்கள், பொருட்கள், மனிதர்கள் யாவும் இஸ்ரவேலின் தேவனுக்கு முன்பாக நன் நடத்தையிலும் மதசார்பான விடயங்களிலும் பரிசுத்தமாக நாம் இருத்தல் வேண்டும். கர்த்தருடைய வழிபாட்டில் பங்கு கொள்ளும் மனிதர்களும், பொருட்களும் பலியிடப்பட்ட இரத்தத்தினால் பரிசுத்தப்படுத்தப்படுவார்கள். நியாயப்பிரமாணமானது, ஒவ்வொரு பொருளும் இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்பட வேண்டும் என்றும்,நியாயப்

பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; **இரத்தஞ்சிந்துதலில்லாமல் *பாவ* மன்னிப்பு உண்டாகாது**. ” (எபி 9:22).

**பாவப்பரிகாரம் பழையகாலத்து நாகரீக நடைமுறையாகும்**.
பழைய காலத்து நாகரீகமெல்லாம், பாவப்பரிகாரத்துடன் தொடர்புள்ள எண்ணக்கருவைக் கொண்டவையாகும்.ஆனால் இவைகள் யாவும் விக்கிரகத் தெய்வங்களுக்கு ஏற்றமாதிரி திரிபுபடுத்தப்பட்டது.அனேகமானவர்கள் விக்கிரக தெய்யவங்கள் நீதியில்லாது ஏமாற்றுபவை என்று கண்டார்கள், பாவப்பரிகாரம் ஒரு தண்டனையிலிருந்து தப்புவதற்கான இலஞ்சம் போல மாறியது,

**லேவியர் ஆகமம் 17-18**

லேவியர் ஆகமத்தின் நான்காவது பெரிய பகுதி இந்த அதிகாரங்களில் காணப்படுகின்றன. இவை பரிசுத்த வாழ்விற்கான விடயங்களைப் பட்டியல்படுத்திக் க:றுகின்றன. நன்நடத்தைக்கான பிரமாணங்கள் தனிப்பட்ட உறவைப்பற்றிக் கூறுகின்றன. முதலாவதாக , பாவப் பரிகாரம் செய்வதற்காக மிருகங்களின் இரத்தம் பயன்னடுத்தப்படுவதை மோசே ஞாபகப்படுத்துகின்றார். சகலவிதமான பலிகளும் ஆசாரிப்புக் கூடாரத்திலேயே செலுத்தப்படல் வேண்டும். , (17:1-9), அத்துடன் பலி செலுத்தும் நோக்கத்தைத் தவிர வேறு எந்த நோக்கத்திற்காகவும் இரத்தம் சிந்தக் கூடாது. (வச 10-16).கர்த்தர் மிகவும் உயர்ந்தவர், ஆனால் அவர் மன்னிக்கும் தெய்வம், பாவியானவர் இரத்தத்துடன் பாவ அறிக்கை செய்ய வரும்போது அவரை ஏற்றுக் கொள்கிறார். இதன்பிற்பாடு பாலியல் உறவு அவர்களைத் தீட்டுப்படுத்துவதுகின்றது என்று மோசே கூறுகிறார். (18:1-28). யாராவது இந்தப்பாவப் பழக்கங்களில் ஈடுபடுவானாக இருந்தால்,ஜனத்தாரின் மத்தியிலிருந்து தள்ளப்படுவான். (வச29-30).

**பிரதான வசனம்.** மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலி பீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. 17:11; இப்படிப்பட்ட அருவருப்பானவைகளில் யாதொன்றை யாராவது செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் ஜனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போவார்கள். 18:29: பாவப் பரிகாரம். இரத்தத்தினால் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

- . கர்த்தர் பரிசுத்தப்படுத்துகிறவர், பரிசுத்தத்தெரிவு செய்வது எங்கள் கடமையாகும்.

**இரத்தம்.**

இரத்தத்திற்கான எபிரேயச் சொல் ***dam*** என்பதாகும். இது பழைய ஏற்பாட்டில் 360 தரம் வருகின்றது. குற்றச் செயல்களினாலோ அல்லது யுத்தத்தினாலோ இவை

சிந்தப்படுகின்றன, அல்லது மிருக இரத்தம் பலிசெலுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே. லேவி . 17:11 ,இரத்தம் புனித தன்மை கொண்ட நீராகும். என்பதை மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். இரத்தத்தை மாத்திரம் புசிக்காதபடிக்கு எச்சரிக்கையாயிரு; இரத்தமே உயிர்; மாம்சத்தோடே உயிரையும் புசிக்கவேண்டாம். உபா 12:23 பலி செலுத்தப்பட்ட இரத்தமானது கர்த்தருடன் பலி செலுத்துபவரை ஒற்றுமைய ஆக்குவதற்கான பிரதிப் பொருளாகும். புதிய ஏற்பாடானது, இயேசுக் கிறிஸ்துவின் மீது எங்கள் கவனத்தை இழுக்கின்றது,கல்வாரியில் அவர் நம்முடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தினார்.பழைய காலத்தில் இரத்தம் பலி செலுத்துதல் இயேசுவின் கல்வாரி மரணத்தை நிழலாகக் காண்பிக்கின்றது.பலிபீடத்தில் தெளிக்கப்படும் இரத்தமானது, இஸ்ரவேலர்களுக்காகவும், எங்களுக்காகவும் இயேசு சிந்திய இரத்தத்தைப் பிரதிபலிக்கின்றது.ரோமர் இவ்வாறு கூறுகின்றது" **எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகினோம்**" ரோமர். 3:23; இப்படி நாம் அவரு டைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. 5:9; **எபேசியர் இவ்வாறு கூறுகின்றது.** அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது. எபேசி. 1:7; அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபா வத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். ; 2:3; கொலோ. 1:20; எபிரே 9:12, 14; 1 யோவான் 1:7; வெளி. 1:5.

**ஆவிக்குரிய விபச்சாரம். (17:7).** விபச்சாரம் என்பது தன்னுடைய துணையைத் தவிர்ந்த மற்றவர்களுடன் பாலியல் புணர்ச்சியில் ஈடுபடுவதாகும். திருமணத்திற்கு முன்பாக புணர்சியில் ஈடுபடுவதைப் போல, வேதாகமத்தில் விபச்சாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். இந்த விடயமானது விபச்சாரம்,வேசித்தனம், விக்கிரக ஆராதனை என்பவற்றுடன் தொடர்புள்ளது, இவற்றைத் தீர்க்க தரிசிகள் மிகவும் கடுமையாக தடைசெய்யும்படி கூறினார்கள். தன்துணையுடன் ஏற்படுத்திய உடன் படிக்கையை விபச்சாரம் மீறச்செய்கின்றது, அதைப் போலவே விக்கிரக ஆராதனையும் இஸ்ரவேலர்கள் கர்த்தருடன் செய்த உடன்படிக்கையை மீறச்செய்கின்றது. ஒவ்வொருத்தரும் முழுமையான உடன்படிக்கைக்காக அழைக்கப்பட்டோம். விக்கிரக ஆராதனை வேசித்தனத்தைப் போல ஒரு மோசமான நடத்தையாகும், இது கர்த்தருடன் உள்ள உறவின் அத்திபாரத்தையே தகர்த்துவிடும். இந்த விக்கிரக ஆராதனையும் வேசித்தனமும் எங்களுக்கு எதை ஞாபகப்படுத்துகின்றன? எங்களைத் தன்னுடைய சாயலாக உருவாக்கினவரை நாம் அவமதிக்கின்றோம், அதனால் நாம் அடையப் போவது என்ன ? சற்றுச்சித்திப்போம். கர்த்தருக்கு விசுவாசமாக இருப்போம்.

**அவர்கள் செய்வதைப் போல செய்யுங்கள். (18:2-3).**
விபச்சாரம் செய்வதற்கான சாட்டுப் போக்குகளைக் கூறி ஒவ்வொருதரும் அதைச் செய்கின்றார்கள். உயர்தர வகுப்புக்களில் கல்விகற்கும் போது, அங்கு அனேக வாலிபல்கள் தங்கள் கன்னித் தன்மையை இழந்து விடுகின்றார்கள். இவ்வாறு பாலியல் சீர்கேடு நடப்பது சாதாரணமாகும் என்று அவர்கள் வாழும் சமூகம் கூறுகின்றது. கர்த்தர் கூறுவது என்னவென்றால் தன்னுடைய பிள்ளைகள் எகிப்தியரைப்போல் அசுத்தத்தில் வாழக்கூடாது என்பதாகும். அங்கே அவர்கள் இருந்து அதையும் முன்பு செய்தார்கள்.கானான் தேசத்திற்குள் சென்றவர்களும் கானானியரைப் போலவே செய்தார்கள். யாவரும் இதைச் செய்தார்கள். ஆனால் இவர்களுக்கு நல்ல சாக்குப் போக்குச் சொல்லமுடியாது.நாம் கர்த்தருடைய பிள்ளைகளாக இருக்கிறபடியால் அவர் சொல்வதையே நாம் செய்ய வேண்டும். நாம் பாகால் தெய்வங்களின் செயற்பாடுகளைச் செய்யக்கூடாது.

**மோளேகு. (18:21).** அம்மலேக் பலியானது, பாகால் தெய்வத்திற்கான பலியல்ல. பாகால் தெய்வத்திடமிருந்து நம்மைகள் வரும் என்றுசெய்கின்ற ஒரு குழந்தைப்பலியாகும்.இது
**அருவருக்கத் தக்கது. (18:22).**
ஒருபால் புணர்ச்சியானது *ebah* என்று அழைக்கப்படும் : மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால், அபத்தம்பேசும் நாவு,பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளைக் கர்த்தர் அருவருக்கின்றார **(நீதி. 6;19-20)**

**லேவியர் ஆகமம் 19**
இஸ்ரவேலின் பரிசுத்த தேவன் பல சன்மார்க்க பிரமாணங்களைக் கொடுக்கிறார்.உன் மிருகஜீவன்களை வேறு ஜாதியோடே பொலியவிடாயாக; உன் வயலிலே வெவ்வேறு வகையான விதைகளைக் கலந்து விதையாயாக; சணல்நூலும் கம்பளிநூலும் கலந்த வஸ்திரத்தை உடுத்தாதிருப்பாயாக. (19:19) உங்கள் தலைமயிரைச் சுற்றி ஒதுக்காமலும், தாடியின் ஓரங்களைக் கத்தரி க்காமலும், செத்தவனுக்காக உங்கள் சரீரத்தைக் கீறிக் கொள்ளாமலும், அடையாளமான எழுத்து களை உங்கள்மேல் குத்திக்கொள்ளாமலும் இருப்பீர்களாக;நான் கர்த்தர். (வச. 27-28). *நாள் நல்ல நேரம் பார்பதை கர்த்தர் வெறுக்கிறார்.*
**முக்கிய வசனம்.** 19:2: **உங்கள் தேவனும்கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.**

**பரிசுத்தம். (19:2)** நான் பரிசுத்தர் என்ற உறுதிப்பாட்டைப்பின்பற்றி அதிகவனம் செலுத்தி பரிசுத்தராக இருங்கள். அவர்கள் களவு,பொய், ஏமாற்றுதல், பழிக்குப்பழி நேர்மை என்பவை பற்றிப் பேசுகிறார்கள். இந்த அதிகாரத்தில் நானே கர்த்தர் என்ற சொல் பல தடவைகள் கூறப்படுவதை நாம் அவதானிக்கிறோம். கர்த்தர் சரியானவற்றைச் செய்வதற்குத் தன்னை அர்ப்பணித்துள்ளார், அதேபோல் தன்னை

ஆராதிப்பவர்களும் சரியானவற்றைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார். ஏசாயா இவ்வாறு கூறுகின்றார். சேனைகளின் கர்த்தர் நியாயத்தீர்ப்பினால் உயர்ந்தது, பரிசுத்தமுள்ள தேவன் நீதியினால் பரிசுத்தராய் விளங்குவார் (5:16). பரிசுத்தம் எப்போதும் நன்மையையே செய்கின்றது, தீமை செய்வதில்லை. உண்மையான பரிசுத்தமுள்ள மனிதன், எப்போதும் தீமைசெய்யாதிருப்பான். அவனோ அவளோ எப்போதும் நன்மை செய்யவே தங்களை அர்ப்பணிக்கின்றார்கள். பரிசுத்தம் என்பதுவே மிகவும் கவர்ச்சி யுள்ள கர்த்தரின் தன்மையாகும். இந்த தகுதி மற்றவர்கள் எங்கள் மேல் கவர்ச்சி கொள்ளச் செய்கிறது.

**அறுவடை செய்தல். (19:9-10).** நீங்கள் தேசத்தின் பயிரை அறுக்கும்போது, உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும், உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

**கூலிக்கு அமர்த்தப்பட்டோர். (19:13** நாளாந்தம் கூலி வேலை செய்பவர்கள் அந்தச் ஊதியத்தைக் கொண்டே தன்னையும் தன் குடும்பத்தையும் போசிக்கின்றார்கள்.. கூலிக்காரனுடைய கூலி விடியற்காலம்மட்டும் உன்னிடத்தில் இருக்கலாகாது.

**வேற்றுமை காட்டாதே (19:15).** நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக.

**வாழ்க்கைக்கு இடர் உண்டாக்காதே (19:16).** இது நியாயப்பிரமாணக் கட்டளையின் முக்கிமானதாகும்,கொலை செய்யாதிருப்பாயாக என்பது பத்துக் கற்பனையில் உள்ளட க்கப்பட்டதாகும். மற்றவர்களுக்கு துன்பம், காயம் ஏற்படுத்தாமல் எமது வாழ்வை நாம் வாழவேண்டும். விபத்துக்கள் ஏற்படாமல் அதிக கவனம் நாம் மேற்கௌ்ளல் வேண்டும். பரிசுத்தமானது எப்போதும் செயற்பட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். நன்மை செய்வதே எங்கள் சன்மார்க்க கடமையாகும். உன் ஜனங்களுக்குள்ளே அங்குமிங்கும் கோள் சொல்லித் திரியாயாக; பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்படவேண்டாம்; நான் கர்த்தர்.

**வெறுப்பு (19:17).** உன் சகோதரனை உன் உள்ளத்தில் பகையாயாக; பிறன்மேல் பாவம் சுமராதபடிக்கு அவனை எப்படியும் கடிந்து கொள்ளவேண்டும். வெறுப்பு என்பதன் எபிரேயச் சொல் உணர்சிவசப்படுதல் என்பதைக்குறிக்கின்றது. இந்த உணர்ச்சிவசப்படுதலால் மற்றவர்கள் பாதிக்கப்படக் கூடிய செயல்களைச் செய்து விடுகிறோம். இது பிரச்சனை என்ற சொல்லுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றது. பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும். (நீதி10:12) இரத்தப்பிரியர் உத்தமனைப் பகைக்கிறார்கள்; செம்மையானவர்களோ அவனுடைய பிராணனைக் காப்பாற்றுகிறார்கள். (29:10).சொற்களின் மிகுதியில் பாவமில் லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான். (10:19), ஒளியிலே

இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான். தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியா திருக்கிறான்.

**வயோதிபர். (19:32).** (இந்தப் பகுதியில் வயோதிபர்களைக் கனம் பண்ணுங்கள் என்று ஆணித்தரமாகக் கூறப்பட்டுள்ளது. நரைத்தவனுக்கு முன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவனின் முகத்தைக் கனம்பண்ணி, உன் தேவனுக்குப் பயப்படுவாயாக; நான் கர்த்தர். அறுபது வயதானது வயோதிபத்திற்குள் நுழையும் காலமாகும். 27:1-8).**வயோதிபர்கள் சமூகத்தில் மூப்பர்களாகச் செயற்படக் கடவர்கள்**. பஞ்சாகமப்புத்தகத்தில் வயோதிபர்களே சமூகத்தைப் பாதுகாக்க வேண்டியவர்கள் என்று கூறுகின்றது.அனுபவமே ஞானத்தைத் தருகின்றது என்று நாம் எடுத்துக்கொள் ளலாம், ,ரெகோபாம் வயதானவர்களின் ஆலோசனையைக் கேட்காதபடியால் பெரும் பிரச்சனைகளைச் சந்தித்தான். (1 ராஜா 12:6-20). வயதானவர்கள் ஆவிக்குரிய தலமையில் சிறப்பாகச் செயற்படுவார்கள் என்று புதிய ஏற்பாடு கூறுகின்றது. முதிர்வயதுள்ளவனைக் கடிந்து கொள்ளாமல், அவனைத் தகப்பனைப்போலவும், பாலிய புருஷரைச் சகோதரரைப்போலவும், முதிர் வயதுள்ள ஸ்திரீகளைத் தாய்களைப்போலவும், பாலிய ஸ்திரீகளை எல்லாக்கற்புடன் சகோதரிகளைப் போலவும் பாவித்து, புத்திசொல்லு. (1 திமேத். 5:1-2).

**அநியாயம் தொடர்கிறது. ” (19:35-36).**நியாயவிசாரணையிலும், அளவிலும், நிறை யிலும், படியிலும் அநியாயம் செய்யாதிருப்பீர்களாக. சுமுத்திரையான தராசும், சுமுத்தி ரையான நிறை கல்லும், சுமுத்திரையான மரக்காலும், சுமுத்திரையான படியும் உங்களு க்கு இருக்கவேண்டும்; நான் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர்.

## லேவியர் ஆகமம் 20

முன்பு கூறப்பட்ட சம்பவங்களை இங்கே மோசே திரும்பவும் கூறுகின்றார். (18-19). அசட்டை பண்ணப்பட்ட பல பிரமாணங்களின் விளைவுகள் இங்கு கூறப்படுகின்றன. இந்த அதிகாரம் இரண்டுவிதமான பாவங்கள் குறித்துப் பேசுகின்றன. உண்மையான சமயத்திற்கு எதிரான குற்றங்கள், (20:2-6, 27), குடும்பத்திற்கு எதிரான குற்றங்கள். (வச. 9-21). இரண்டும் மரணதண்டனைக்குரியவை, ஏனெனில் உடன்படிக்கையின் பிள்ளைகளாகிய கர்த்தருடைய பிள்ளைகளை இந்தக்குற்றங்கள் பயப்படச் செல்கி ன்றன. . ஆனால் இவைகள் பரிசுத்த வாழ்வு வாழ்வதற்கு உற்சாகப்படுத்துகின்றன.

(வச. 7-8, 22-26). இந்தப் பிரமாணங்களை மீறுகிறவர்களை சமூகம் தனிமைப் படுத்தல் வேண்டும்.கர்த்தருடைய பிள்ளைகள் தங்கள் மத்தியில் பரிசுத்தத்தை கடைப்பிடிப்பது ஒவ்வொருவரின் கட்டாயகடமையாகும்.

- 20:22:**தனிப்பட்ட ஒருவனைப் பாவம் செய்கிறதற்கு அனுமதிக்கிற சமூகம் நியாயம் தீர்க்கப்படும்** (ஆகையால் நீங்கள் குடியிருப்பதற்காக நான் உங்களைக் கொண்டுபோகிற தேசம் உங்களைக் கக்கிப்போடாதபடிக்கு, நீங்கள் என் கட்டளைகள் யாவையும் என்னுடைய நியாயங்கள் யாவையும் கைக்கொண்டு நடவுங்கள். )
- எங்களுடைய தராதரத்தை இவ்வுலகத்திற்குரிய சமுதாயத்தின் மீது சுமத்தமுடியாது, ஆனால் நீதியான பிரமாணங்களை கைக்கொள்வதற்கு உற்சாகப்படுத்தலம்.

**கொலைசெய்யப்படவேண்டும்; (20:2).** இது பத்துக்கற்பனையை மீறுவதல்ல, ஆறாவது கட்டளையானது கொலைக்கு எதிரானதாகும், , இது ஒரு தனிப்பட்ட குற்றமாகும்.. உடன்படிக்கையின் பிள்ளைகள் கட்டளைகளைமீறுவதால் கொலை செய்வது என்பது கொலை அல்ல, இது ஒரு நியாயத்தீர்ப்பின் வெளிப்பாடாகும்.
**அறுப்புண்டு போகச்செல்லுதல். (20:3).** இங்கு கூறப்படும் சொல்லானது முடிவுறச் செய்தல் என்று பொருள்படும். மற்றவர்களுக்கு இது உலக மரணத்தைக்குறிப்பதாகப் புலப்படும். அல்லது சமூகத்திலிருந்து விலக்கிவைத்தல் என்று பொருள்படும்.

இவைகள் பலவித அளவுகள் உள்ள கற்களாகும். இவை நிறைகளுக்குப் பயன் படுத்தப்படுபவையாகும். முற்காலத்தில் பொதுவான நிறைகற்கள் அளவுகள் இல்லை, புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் பலவிதமான நிறைகற்களைக் கண்டுபிடித்துள்ளார்கள்.
**என்னுடைய முகத்தை எதிராகவைப்பேன். (20:6).** இதன் அர்த்தம் விரோதமாக இருப்பேன் என்பதாகும் அல்லது எதிராக நடவடிக்கை எடுத்தல் என்பதாகும்.

**தன் தாயையோ, தகப்பனையோ சபிக்கிறவன். (20:9).** தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக. கர்த்தருடைய பிள்ளைகள் பெற்றோரைக் கனம் பண்ணுதல் வேண்டும், மாறாகச் சபித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

**வேறுபிரிதல். (20:22-26).** மீண்டும் பரிசுத்த்திற்கு அழைத்தல் என்பது, இஸ்ரவேலர்கள்

கர்த்தருக்கென்று பிரிந்து வாழல் வேண்டும். இது மற்றவர்களுக்கிடையில் உள்ள வித்தியாசமாகும்.

**லேவியர் ஆகமம் 21-22**

மோசே தற்போது ஆசாரியர்களுக்குரிய நன்னடத்தைக்கானதும், மதசம்பந்தமானதுமான விசேஷித்த பிரமாணங்கள் பக்கமாகத் தன்னுடைய கவனத்தைத் திருப்புகிறார். ஆசாரியர்கள் ஆசாரிப்புக் கூடாரத்தில் கர்த்தரைச் சேவிப்பதனாலும், அவர்கள் கர்த்தருடன் மிகநெருக்கத்தில் தொடர்பு கொண்டவர்களாக இருக்கிறபடியினாலும், ஆசாரியர்கள் நிலை மிகவும் உயர்ந்த தாகக் காணப்படுகின்றது. ஆசாரியர்கள் தங்கள் கிட்டிய உறவாளிகளுடைதைத் தவிர வேறு யாருடையதுமான செத்த பிணங்களைத் தொடக்கூடாது. (21:1-6).

பிரதான ஆசாரியர் கர்த்தருக்கு மிகநெருக்கமானவர்கள்,ஆதாலால்,பிரேதம் இருக்கும் இடங்களுக்கு செல்லக் கூடாது. (வச 10-12).

ஆசாரியர்கள் விவாகரத்து செய்தவர்களையும், வேசியையும் திருமணம் செய்யக் கூடாது. (வச 7-8, 13-15). அங்கவீனமுள்ள ஆசாரியன் தேவனுடைய அப்பத்தைச் செலுத்தும்படி சேரலாகாது.( 16-24).

ஆசாரிய குடும்பத்திலுள்ளவர்களில் யார் யார் பலிசெலுத்தப்பட்ட உணவுகளைச் புசிக்கலாம் என்பதில் அதிக அக்கறையுடன் கவனத்துடன் பிரமாணங்களை வகுத்துள்ளார். (22:1-16).

- 22:32: என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருப்பீர்களாக; நான் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தர் என்று மதிக்கப்படுவேன்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.
- கர்த்தருக்கு நெருக்கமாக ஜீவிப்பவர்கள் பரிசுத்தமாக ஜீவிப்பது அவசியம்

**மரித்தவர்கள்.(21:1-4).**

இஸ்ரவேலில் மரித்தவர்களைத் தொட்டவர்கள், அவர்கள் குறிப்பிட்ட காலம்வரை அல்லது குழித்து,முழுகும்வரை தீட்டாயிருப்பார்கள்.( 11:39-40; எண். 9:6-7). தீட்டாயிருப்பவர்கள் தேவசமூகத்தைத் தேடக் கூடாது.இவ்வாறான வழிகளினால் ஆசாரியர்கள் தங்களைத் தீட்டுப்படுத்தக் கூடாது. அதாவது தங்கள் குடும்ப அங்கத்தவர்கள் தவிர்ந்த யாருடைய பிரேதத்தையும் அவர்கள் தொட்டுத் தங்களைத்

தீட்டுப்படுத்தலாகாது. பிரதான ஆசாரியர்கள் இவ்வாறான எதனையும் செய்யலாகாது, அவர்கள் மக்களுக்காக எப்போதும் கர்த்தருடைய சமூகத்திற்கு வரவேண்டியவர்களாவார்கள். (லேவி. 21:11-12).

**விவாகரத்துச் செய்யப்பட்டவள். (21:7-8, 13-15).** பழைய ஏற்பாட்டுக்காலத்தில் விவாகரத்துப் பொற்றவர் மீண்டும் திருமணம் செய்ய முடியும். ஆசாரியர்கள் விதவையையானாலும் தள்ளப்பட்டவளையானாலும் கற்புகுலைந்தவளையானாலும் வேசியையானாலும் விவாகம் பண்ணாமல், தன் ஜனங்களுக்குள்ளே ஒரு கன்னிகையை விவாகம்பண்ணக்கடவன். (வச 14). புதிய ஏற்பாட்டுக்காலத்தில், ஆசாரியர்கள், தன்னை இஸ்ரவேல் கோத்திரத்தாள் என்று நிரூபிக்கத் தவறுபவளைத் திருமணம் செய்ய முடியாது.

**அங்கக் குறைவுள்ளவர்கள். (21:16-21; 22:17-22** அங்கக் குறைவுள்ளவர்கள், ஆசாரிகளாவதற்குத் தகுதியற்றவர்கள்,அவர்களின் நலன் கருதியே கர்த்தர் சொன்னார்,பலி செலுத்த கடினமான வேலை செய்ய முடியாது,ஆலயத்துக்கு வருபவர்களின் சிந்தனை சிதறக்கூடாது என்பதற்காகவும். அதேபோல் அங்கக் குறைவுள்ள மிருகங்களும் பலியிடப் படுவதற்குத் தகுதியற்றவைகளாகும்.கர்த்தர் எங்களிடமிருந்து சிறந்தவைகளையே எதிர் பார்க்கின்றார்.குறைவுள்ளவற்றைக் கர்த்தருக்குக் கொடுப்பதனால் நாம் கர்த்தரைக் கனவீனப்படுத்துகின்றோம்.

.

**ஏற்புடைய ஆராதனை.** கர்த்தருக்கு எது உகந்தது என்று பழைய ஏற்பாடு குறிப்பிட்டுக் காண்பிக்கின்றது,ஆராதனை எப்படிச் செய்யவது என்பதை வேதாகமம் குறிப்பிட்டுக் காண்பிக்கின்றது.பழுதுள்ள ஆசாரியனையோ மிருகத்தையோ கர்த்தர் ஏற்றுக் கொள்வதில்லை.மல்கியா தீர்க்கதரிசிக்கூடாக கர்த்தர் இவ்வாறு பேசுகியார், "குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம்பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள். என் பீடத்தின்மேல் அசுத்தமான அப்பத்தைப் படைக்கிறதினாலேயே; ஆனாலும் உம்மை எதினாலே அசுத்தப்படுத்தினோம் என்கிறீர்கள்; கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப்போயிற்றென்று நீங்கள் சொல்லுகிறதினாலேயே. நீங்கள் கண் ஊனமானதைப் பலியிடக் கொண்டு வந்தாலும் அது பொல்லாப்பல்ல, நீங்கள் காலூனமானதையும் நசல் பிடித்ததையும் கொண்டுவந்தாலும் அது பொல்லாப்பல்ல என்கிறீர்களே; அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல்

பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார்.

**லேவியர் ஆகமம் 23-24**

ஆராதனை எப்படிச் செய்வது என்பதில் தற்போது மோசே கூடிய கவனம் செலுத்துகிறார். விஷேட தினங்களில் பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் ஜனங்கள் இணைந்து கர்த்தரை துதித்தார்கள்.(லேவி 23). கர்த்தரில் மட்டும்தான் இங்கு கவனம் செலுத்தப்படுவதைப் பார்க்கின்றோம், காணிக்கை செலுத்துதல் பற்றி ஒரு நிரந்தர மான கொள்கை ஏற்படுத்தப்பட்டது. ( 24:1-9) தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலை செய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக. 20:9,

23:2: சபை கூடி வந்து பரிசுத்த நாட்களை ஆசரிக்கவேண்டும்
ஆராதனை ஆலயத்தில் செய்யப்படல் வேண்டும்.

| இஸ்ரவேலர்களின் மதசார்பான நாட்காட்டி | | |
|---|---|---|
| **விழாக்கள்.** | **திகதி** | **கருத்து** |

| | | |
|---|---|---|
| பஸ்கா பண்டிகை | 14 நிசான் (மார்ச்/ஏப்ரலில்) | இது நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய பண்டிகை, இது வீட்டிலே கொண்டாடப்படும். ஒவ்வொரு குடும்பமும் பஷ்கா போசனத்தை உட்கொண்டு தங்கள் உரிமைகளை நினைவு கூருதல் வேண்டும், கர்த்தர் அன்று இரவு எகிப்தியரை அடித்ததையும், யூதர்களின் குடும்பங்களை அழிக்காமல் கடந்து சென்றதையும் நினைவு கூருதல் வேண்டும்.( யாத் 12)..இதுவே மதச்சார்பான முதல் நாள் கொண்டாட்டமாகும், இது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டதைக் குறிக்கின்றது. |
| புளிப்பில்லாத அப்பம். பண்டிகை | 15-21 நிசான் (மார்ச்/ஏப்ரலில்) | ஒரு வாரகாலமாக பலிசெலுத்துதல் இடம்பெறும், இந்தக் காலங்களில் ஜனங்கள் புளிப்பில்லாத அப்பங்களை உண்ணுவார்கள், இது முற்பிதாக்கள் அவசர அவசரமாக எகிப்திலிருந்து புறப்படுவதற்கான ஆயத்தங்களை மேற் கொண்டதை நினைவு கூருதலாகும். (யாத் . 12:34). |
| முதற்பலன் பண்டிகை | 16 நிசான் (மார்ச்/ஏப்ரலில்) | நன்றி செலுத்தும் கொண்டாட்டம், அறுவடை காலங்களில் கொண்டாடப்படும். இந்த நாட்களில் புதிதாக அறுவடை செய்யாத கதிர்கள் கர்த்தருக்குச் சமர்ப்பிக்கப்படும். இது இயேசுக் கிறிஸ்த்துவின் உயிர்த்தெழுதலுக்கான முன் மாதிரியாகும். இது முதற்பலன் என்று 1கொரிந்தியர் 15:20-23.இல் கூறப்பட்டுள்ளது. |
| பென்தகொஸ்தே நாள். பண்டிகை (வாரங்கள்) | 5 சிவன் (மே/யூன்) | புதிய கதிர்கட்டுக்கள் நன்றி செலுத்துவதற்காக கர்த்தருக்குக் கொடுக்கப்படும், அத்துடன் விஷேசித்த பலிகளும் செலுத்தப்படும். இது பரித்த ஆவி பென்தகொஸ்தே நாளில் வந்ததற்கான முக்கி அடையாளமாகும், 3,000 பேர் இந்நாளில் மனம்மாறி கர்த்தரை ஏற்றுக் கொண்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள்.கர்த்தர் இழந்துபோன ஜனத்தாரிலிருந்து கர்த்தருக்காக எழும்பிய |

| | | |
|---|---|---|
| | | முதற் கிறிஸ்தவர்களாகும்.இது இலட்சக்கணக்கான ஜனங்களைத் தனக்காக கர்த்தர் சேர்த்துக் கொள்வார் என்பதற்கான அடையாளமாகும். |
| எக்காளப் பண்டிகை (Rosh Hashanah/புது வருடப்பிறப்பு ) | 1 திசிறி (செப்ரம்பர்/ஒக்ரோபர்.) | இந்த நாள் இஸ்ரவேலர்களின் குடியியல் வருஷத்தின் ஓய்வு நாளாகும்.றோஸகசானா (Rosh Hashanah) என்பது வருடத்தின் முதல் நாள் என்று பொருள்படும், அதாவது புது வருடப்பிறப்பாகும். |
| **பாவப்பரிகாரநாள்**. பண்டிகை (Yom Kippur/ பாவப்பரிகார நாள்) | 10 திசிறி (செப்ரம்பர்/ஒக்ரோபர்) | இந்த முக்கியமான நாளில், உபவாசத்துடனும் பிரதான ஆசாரியர் மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து இஸ்ரவேலின் முழு ஜனத்தாரின் பாவத்திற்காகவும் பாவப்பரிகாரம் செய்வார். ( லேவி. 16).ஜொம் கிப்பூர்" (Yom Kippur )என்பது பாவப்பரிகார நாள் என்று அர்த்தம் கொண்டதாகும். |
| கூடாரப் பண்டிகை. (Succoth) | 15-21 திசிறி (செப்ரம்பர்/ஒக்ரோபர்) | இந்த நாட்களில் இஸ்ரவேலர்கள் வீடுகளிலிருந்து வெளியேறி, மரக்கிளைகளினால் அமைக்கப்பட்ட சிறிய கூடார ங்களில் வாசம்செய்வார்கள். இந்த நாட்களில் ஒரு வேலையும் செய்யப்படமாட்டாது, கடந்த காலத்தில் மூதாதையர் வனாந்தரத்திற்கூடாக சென்ற அந்த நாட்களை நினைவு கூருவார்கள். இந்த இழைப்பாறும் நாள், பாவப்பரிகார நாளு க்கு அடுத்த நாள் தொடங்குகின்றது, இது இரட்சிப்பின் கிடைக்கும் இழைப்பாறுதலையும், மகிழ்சியையும் குறிக் கின்றது, சுக்கோத்து(Succoth) என்பதன் அர்த்தம் கூடாரம் என்பதாகும். இந்த நாட்கள் 22ம்திகதி ஒன்று கூடி பலிசெலுத்த லுடன் முடிவடைகின்றது. |
| **குறிப்பு**:- இதன்பிற்பாடு, இஸ்ரவேலர்களின் சரித்திரத்தில், மற்றய பண்டிகைகளும் | | |

யூதர்களால் கொண்டாடப்படும். **கனுக்கா**, பிரதிஸ்டைப் பண்டிகை, அல்லது ஒளியின் பண்டிகை, இது 25 கில்வி மாதம் ( நவம்பர்/ டிசம்பர்) கொண்டாடப்படும். . மக்காபேயர்களின் காலத்தில், மீண்டும் பிரதிஸ்டை பண்ணப்பட்ட ஆலயத்தில், பரிசுத்த எண்ணெய் ஊட்றப்பட்டு அவை எரியவிடப்படும். **பூரிம்** பண்டிகை ராணி எஸ்தரின் தலையீட்டினால் யூதர்கள் காக்கப்பட்டதை நினைவு கூரும் வண்ணமாக 14 ஆதார் (பெப்றுவரி/ மாச்) இல் கொண்டாடப்படும்.

### லேவியர் ஆகமம் 25

ஆராதனை என்பது கர்த்தருடைய சமூகத்தில் அவரைப் பாடித்துதிப்பதிலும்மேலானது. அதாவது . **இது கர்த்தருடைய நோக்கத்தை மகிழ்வுடன் நிறைவேற்றுதலாகும்.** . மோசேயினால் இஸ்ரவேலர்களுக்கு சிறப்பான பிரமாணங்கள் கொடுக்கப்பட்டன. கர்த்தரை உண்மையாக கனப்படுத்துவதற்கான தெரிவுகள் பல கொடுக்கப்பட்டன. ஏழாம் வருஷத்திலோ, கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத்திற்கு இருக்க வேண்டும்;, நிலங்களும் ஒவ்வொரு 7ம் வருடமும் ஓய்ந்திருக்க வேண்டும். (25:1-7). இரண்டாவதாக ஒவ்வொரு 50ம் வருடமும் யூபிலி கொண்டாடப்படல் வேண்டும். ஒருவன் தன்நிலங்களை விற்றிருந்து, அதை மீட்காமல் போனால், அவன் விற்றது வாங்கினவன் கையிலே யூபிலி வருஷம்மட்டும் இருந்து, யூபிலி வருஷத்திலே அது விடுதலையாகும்; அப்பொழுது அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பப் போவான். இந்தப் பிரமாணங்கள் வறியவர்களுக்கு நிவாரணத்தை கொடுப்பதாகவும் அமைகின்றது.

- 25:36-37: நீ அவன் கையில் வட்டியாவது பொலிசையாவது வாங்காமல், உன் தேவனுக்குப் பயந்து, உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படி செய்வாயாக. அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும், உன் தானியத்தைப் பொலிசைக்கும் கொடாயாக.

**நிலம்** **(25:23-24).** இஸ்ரவேலர்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழைந்தவுடன், ஒவ்வொரு குடும்பமும் தங்களுக்குரிய நிலங்களைக் குலுக்கல் சீட்டுமூலம் பெற்றுக் கொள்வார்கள். இந்த நிலங்கள் அந்தக் குடும்பங்களுக்கு நிரந்தரமானவையாகும், இவை கர்த்தரால் வழங்கப்பட்ட கொடுப்பனவாகும். இதனை யூபிலி கொள்கையில் நாம் காணமுடியும்.

**வறுமை.**

பழைய ஏற்பாட்டில், வறுமையானவர்களுக்காக விசேட ஏற்படுகளைக் கெண்டுள்ளது. அத்துடன் வறுமையானது அவர்களின் குற்றமல்லவென்றும் கூறுகின்றது.

(1) குடிசார் வழக்குகளில் வசதிபடைத்தவர்களுக்கு நியாயாதிபதிகள் உதவிசெய்யக்கூடாது என்று கேட்கப்பட்டுள்ளார்கள். (19:15).

(2)குடும்ப நிலமானது நிரந்தரமாக இழக்கப்படக்கூடாது, ஆனால் 50 வருடங்களுக்குப்பின்பு ஆரம்ப உரிமையாளருக்கு அது திரும்ப ஒப்படைக்கப்படல் வேண்டும். இதன் உட்பொருள் ஐம்பது வருடங்களுக்குப் பின்பு அவர்களுக்குரியவை திரும்பக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதாகும். (லேவி 25).

(3) ஓய்வு வருடத்தில் உரிமையாளர்களால் பயிர் செய்யப்படாத நிலத்தில் வறுமையனவர்கள் அந்த நிலங்களில் பயிர் செய்ய முடியும். (யாத். 23:10-11).

(4) சாதாரண அறுவடைக் காலங்களிலும், அறுவடை நேரத்தில் வறியவர்கள் நிலத்தில் விழுவதைப்பொறுக்கி கொள்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். பறிக்காமல் விடப்பட்ட பழங்களையும் எடுத்துக் கொள்ள முடியும். (வச10-11; லேவி. 19:10).

(5) வறுமைப்பட்ட இஸ்ரவேலர்களுக்கு வட்டியற்ற கடன்வசதியும், உணவுப்பண்டங்கள் இலாபம் இல்லாமலும் கொடுக்கப்படும். (25:35-37).

(6) ஒவ்வொரு ஏழாவது வருஷத்திலும், வரவேண்டி இருக்கும் கடன்கள் மன்னிக்கப்பட்டு யாவும் தள்ளுபடி செய்தல்வேண்டும். (உபா15:7-11).

(7) மூன்றாம் வருஷத்தின் முடிவிலே அவ்வருஷத்தில் உனக்கு வந்த பலன் எல்லாவற்றிலும் தசமபாகத்தைப் பிரித்து, தேவையானவர்களுக்கு கொடுப்பாயாக. (.உபா 14:28-29).

(8) வறுமையில் இருக்கும் ஒருவன் தன்னைத் தானே இஸ்ரவேலருக்கு அடிமையாக விற்கமுடியும்.ஏழாம் வருட முடிவில் அவன் விடுதலையாக்கப்படல் வேண்டும். அத்துடன் அவன் தன்னுடைய ஊதியத்தை மேம்படுத்துவதற்கான தொழில் செய்வதற்கான உதவிகளையும் செய்தல் வேண்டும். (லேவி25:39-54; உபா 15:12-18).

**அடிமைத்தனம்.**

பழைய ஏற்பாட்டில், ஏழைகளுக்கு உதவிசெய்யும் வழிகள் காணப்படுகின்றன. அடிமைத்தனம் என்பது நாம் அறிந்திருப்பது போல் வெறுக்கத்தக்க ஒரு துன்பப்படுத்தும் ஒரு நிறுவனம் அல்ல. ஆனால், அடிமையாக்கப்பட்டவன் எஜமானுடைய விருப்பங்களைச் செயற்படுத்த வேண்டியவன்.ஆனால் அவற்றின் நிபந்தனைகள் தற்காலிகமானவையாகும், இவை அனோக நன்மைகளைக் கொண்டுள்ளன. அத்துடன் மனிதாபிமானப்படி தன்னுடைய எஜமானால் நடத்தப்

படவேண்டியவர். (25:42-43).இந்த நல்ல விடயம் உணரப்படாதவர்கள் விடுதலையாக்கப்படவில்லை. எரேமிய, முதலாம் நூற்றாண்டிலிருந்து எருசலேம் மக்கள் பலதடவைகள் அடிமைகளாக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன, அதனால் அவர்கள் விடுதலையாக்கப்படவேண்டியவர்களாவார்கள்.. இஸ்ரவேலில் காணப்பட்ட அடிமைத்தனமானது மற்றய நாடுகளைப் போன்றிராமல் வித்தியாசமானவையாகும், அவை வறியவர்களுக்கு உதவி செய்யும் வண்ணமானவையாகும்.

**பாவத்திலிருந்து விடுதலை.**

மீட்பு என்பது, விலை கொடுத்து மீளப் பெற்றுக் கொள்ளுதலாகும். இந்த அதிகாரத்தில் குடும்ப நிலங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கும், அல்லது விலைப்பட்டுப் போன மனிதர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் உரிமை பற்றி இந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. தன்னையோ தன்னுடைய நிலத்தையோ மீட்டுக் கொள்ளமுடியாத மனிதன், தன்னுடைய மிகக் கிட்டிய உறவாளியானவன் மூலம் மீட்டுக் கொள்ளப்பட முடியும். இயேசுக்கிறிஸ்த்து மனிதனாக வந்ததன் மூலம், அவர் எங்கள் மீட்பராகின்றார்,அவர் எங்களுக்குரிய விலைக்கிரயத்தைக் கொடுத்து கர்த்தருக்கென்று எங்களை மீட்டுக் கொள்ளும் உரிமையைப் பெற்றுள்ளார்.

**லேவியர் ஆகமம் 26-27**

எங்களுடைய ஆராதனையும்,தீர்மானங்களும் சதந்திரமாக கர்த்தருக்கு ஊழியம் செய்வதாகவே இருத்தல் வேண்டும். ஆனால் கீழ்ப்படிதலுக்கு லேவியர் ஆகமம் 26 இல் கனம் கிடைப்பதை நாம் அவதானிக் கின்றோம். (வச1-13),கர்த்தருக்குக் கீழ்ப்படியாமல் இருப்போமாகில் பயங்கர அழிவுகளை நாம் சந்திக்க நேரிடும். (வச 14-39). முதலாவதாக, எங்கள் ஒவ்வொரு தெரிவிற்கும் விளைவுகள் உண்டு. இவற்றிற்கு உணர்வடையும்படி கர்த்தர் விரும்புகின்றார். இரண்டாவதாக,அதற்கான காரணம் வசனம் 40-46 இல் காணப்படுகின்றது. எதிர்காலத்தில் இஸ்ரவேல் கர்த்தரை வெறுத்துவிடுவார்கள்,அதற்கான விளைவுகளுக்காகத் துயரப்படுவார்கள். தங்கள் சந்ததி முழுவதுமாகத் தள்ளப்படவில்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்பதை கர்த்தர் விரும்புகின்றார். கர்த்தருக்குக் காணிக்கைகளையும், தசமபாகங்களையும் சுதந்திரமாக்க கொடுக்க வேண்டும் என்பதை புத்தகம் வலியுறுத்துகின்றது. 27:1-25). வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் சொந்தக்காரராக கர்த்தர் இருப்பதால் அவருக்கு வாடகை கொடுப்பது போல தசமபாகம் கொடுக்கப்படல்

வேண்டும். (வச 26-34).

- 26:44: அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நான் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவுமாட்டேன்; நான் அவர்கள் தேவனாகிய கர்த்தர்.
- கர்த்தர் எங்களுக்கு எல்லாவற்றையும் தருவதற்கு அர்ப்பணம் செய்துள்ளார், ஆதலால்.நாம் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் சேவையாற்றக்கடவோம். அவரின் உடன் படிக்கையைகமீறாதிருப்போம்,பொருத்தனைகளை உரிய நேரத்தில் நிறைவு செய்வோம், தசமபாகம் காணிக்கைகளை உற்சாகமாகக் கொடுப்போம்.

**எதிரிகள் (26:7-13).** எதிரிக்கான எபிரேய வார்த்தை வெறுக்கப்பட்டோர் என்றும் பகையான செயற்பாடுகள் என்றும் பொருள்படும். இவைகள் ஆரம்பத்தில் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர்களுக்கும், அவர்களைச் சூழ இருந்த பாகால் தேசத்தாருக்கு மான இடையில் காணப்பட்ட பகமையைப்பற்றியதாக கூறப்பட்டுள்ளன. இந்த அதிகாரமானது கர்த்தருக்கு விசுவாசமாக இருக்கும் போது இஸ்ரவேலர்களுக்கு வெற்றி உண்டு என்பதற்கான வாக்குறுதிகளைக் கொண்டதாகும்,கர்த்தரைக் கைவிடும்போது அவர்களுக்கு தோல்விகள் ஏற்படும் சூழ இருந்த பாகால் தேசத்தா ரின் சமயம், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எதிரிகளாகத் தோன்றின. எதிரி என்ற வார்த்தை தெய்வம் சம்பந்தமான வார்த்தையாகவே ஆரம்பத்தில் இருந்தன. இது அரசியலாக அப்போது இருக்கவில்லை.கர்த்தர் உலகம் முழுவதற்கும் கர்த்தரா யிருக்கிறார். தன்னுடைய மக்களை ஒழங்குபடுத்துவதற்காக எதிரியான தேசங்க ளைப் பயன்படுத்தினார்.கர்த்தர் அசீரியர்களை தன் கோபத்தின் கோலாகப் பயன்ப டுத்தினார். அவர்களை தன் சினத்தின் தண்டாயுதமாகப் பயன்படுத்தினார். ஏசா 10:5). காலம் செல்ல ஆபகூக் கூறுகின்றார், '**கர்த்தர் பாபிலோனியரைப் பயன்படுத்தி தன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலர்களைச் சீர்திருத்துகிறார்"**

**அறிக்கை பண்ணு (26:40).** வேதாகமத்தில் துன்பம் தரும் நிகழ்சிகளைப் பார்ப்பது தவறான விடயமாகும், அல்லது எங்கள் வாழ்க்கையில் கர்த்தரிடமிருந்து தண்டனையைப் பெறுவது உண்மையில் ஒரு வேதனையான விடயமாகும். எங்கள் பாவத்தின் விளைவாக துன்பத்தை அனுபவிப்பது, எங்களுக்கு அறிவூட்டும் செயலாகும். எங்களுடைய குற்றத்தைப்பார்பதற்கு கட்டாயப்படுத்தி அதற்கான

பொறுப்பை உணர்ந்து கொண்டு கர்த்தர் பக்கமாக நேர்மையாகத் திரும்ப வேண்டும்.என்ன நடந்தாலும் உணர்வில்லாமல் இருப்பீர்களாயின் காலம் கடந்து சென்றுவிடும். தங்கள் பாவத்தை ஏற்றுக் கொண்டு மனம் திரும்பி கர்த்தரிடம் வருபவர்களுக்காக கர்த்தருடைய வாசல் எப்போதும் திறந்தபடியே காணப்படும் என்பதை மறக்கவேண்டாம். உங்களுக்கு ஏற்படும் துன்பம் எல்லாம் உங்களைப் பிழிந்து எடுப்பதற்காகவல்ல, மாறாக கர்த்தர் பக்கம் உங்களை வரப்பண்ணுவதற்காகவேயாகும்.கர்த்தர் உங்களை உயர்த்த வல்ல வராய் இருக்கின்றார்.

**முழுவதும் வெறுக்க வேண்டாம். (26:44)**.. நீ கர்த்தருக்குத் தூரமாக இருந்தால், நீயாகவே அவரைவிட்டு விலகிப் போயுள்ளாய், ஆனால் நீ மீண்டும் திரும்பி கர்த்தரிடத்தில் வந்தால், நீ அங்கே கர்த்தரைக் கண்டு கொள்ளலாம். அவர் உன்னைத் தன் வீட்டிற்கு அழைப்பதற்குப் பார்த்துக் கொண்டே இருக்கின்றார்.

**மனிதர்களின் பெறுமதி பார்த்தல். (27:1-8).**

இந்த விலைமதிப்பானது மனிதன் என்ற முறையில் உள்ளார்ந்த பொறுமதி எதுவும் அற்றது, அனாலும் அவர் தன்வீட்டிற்கு எவ்வளவான பொருளாதாரத்தை கொடுக் கின்றார் என்பதை இஸ்ரவேலர்கள் வயது போனவர்களுக்கு நல்ல பெறுமதியைக் கொடுக்கின்றார்கள். என்பதில் எந்த முரண்பாடுகளும் இல்லை. அதுமட்டுமல்லாமல் மிகக் குறைந்த பெறுமதியையும் வயதானவர்களுக்கு கொடுத்துள்ளார்கள். இவ்வா றான பட்டியலைப்பார்த்து நாம் அசந்து போகலாம். முழுமுதிர்ச்சியடைந்த வயது 20 இல் இருந்து தொடங்குகின்றது. முதிர்வயது 60 இலிருந்து தெடங்குகின்றது. ஒரு இளம் பெண்ணின் பொருளாதார கெடுப்பனவு ஒரு இளம் மனிதனின் பெருளாதாரக் கெடுப்பனவின் 3/5 பங்காகும். அதற்குககீழ்ப்பட்டவர்கள் ½ பெரிதாகும். அவர்கள் சமூகத்தில் என்ன செய்கின்றார்கள் என்பதை வைத்தே அளவிடப்படுகின்றார்கள். அதனால் எனக்கும் உனக்கும் ஒரு முக்கிய விடயம் என்னவென்றால், கர்த்தருக்குள் மனிதர்களின் உள்ளார்ந்த பெறுமதியைக் கணக்கிடல் வேண்டும். அப்படி நாம் செய்வோமாகில் ஒவ்வொரு மனிதனும் அளவிட முடியாத பெறுமதியுடையவனாகும். கர்த்தரும் இப்படிப்பட்டவர்களுக்காகவே தன்னுயிரைக் கொடுத்தார்.

நன்றி கர்த்தாவே

திராணி

உசாத்துணை நூல்கள்.

**THE BIBLE READER'S COMPANION** *By* **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**WILLMINGTON'S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**WILLMINGTON'S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**PARSONS BIBLE PICTURES PARSONS TECHNOLOGY, INC. Cedar Rapids, Iowa**